பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 04 சனிக்கிழமை (17.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 029




# இந்.வெளியுறவுச் செயலருடனான பேச்சுவார்த்தையில் திருப்தி

## கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தாம் திருப்தியடைந்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். எனினும் போரை நிறுத்துவது குறித்து அவர் எதுவும் பேசினாரா என்பது குறித்த தகவல் எதுவும் வெளியாகவில்லை. (12ஆம் பக்கம் பார்க்க)



சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள திருமாவளவன் நேற்று இரண்டாவது நாளாக தனது போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

## தருமபுரத்தில் இருந்து நேற்று மும்முனைகளில் முன் நகர்வு

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டம் தருமபுரத்தில் இருந்து மும்முனைகளில் படையினர் மேற்கொண்ட பாரிய முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் 51 படையினர் கொல்லப்பட்டதுடன் 150 படையினர் காயமடைந்துள்ளனர்.

தருமபுரம் பகுதியில் இருந்து நேற்று அதிகாலை 12 மணியளவில் படையினரின் சிறப்புத்தாக்குதல் கொமாண்டோக்கள் கனரக சூட்டாதரவுடன் மும்முனைகளில் முன் நகர்ந்தனர்.

இவர்கள் மீது விடுதலைப்புலிகள் கடுமையான தாக்குதல் நடத்தினர். நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் படையினரின் நகர்வுகள் யாவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு நோக்கி தொடர் எறிகணைத் தாக்குதல்

### நேற்று மட்டும் 14 பேர் பலி

(கிளிநொச்சி)

வன்னி பகுதியில் படையினர் பரவலாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல்களில் நேற்று மட்டும் 14 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடுநகர் மற்றும் சுற்றயல் பகுதிகள் மீது நேற்று வெள்ளிக்கிழமை செறிவான எறிகணைத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் புன்னை நீராவிபகுதியில் உழவூர்தி மீது எறிகணை (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா உதவி

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் தற்போது இடம்பெற்றுவரும் மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிப்பொருட்களை வழங்க முன்வந்திருப்பதாக இந்தியாஅறிவித்துள்ளது.

இது குறித்து நேற்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள இலங்கைக்கான இந்திய தூதரகம்,வடக்கில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மனிதாபிமானத்தேவைகளை வழங்குவதில் இலங்கை அரசுடன் இணைந்து இந்தியா தொடர்ந்தும் செயற்படும் என்றும் இதன் அடிப்படையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வந்த மக்களை உறவினர்கள் சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

புதிதாக விடுவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள மக்களை அவர்களது உறவினர்கள் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து ஆயிரத்து 796 பேர் யாழ்ப்பாணம் வந்துள்ளதாக அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து 627 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 796 பேர் யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளனர்.

இவர்களில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 440 பேர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இடைத்தங்கல் முகாமிலும் 24 குடும்பங்களைச்சேர்ந்த 61 பேர் யாழ்ப்பாணம் திருநகர் இடைத்தங்கல் முகாமிலும் 416 குடும்பங்களைச் சோர்ந்த ஆயிரத்து 295 பேர் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை மற்றும் அதனுடன் இணைந்த தேவாலய இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான மூன்று வேளை சமைத்த உணவு, அடிப்படைத் தேவைகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு உணவுப் பொருட்கள் நேற்று அனுப்பி வைப்பு

(கொழும்பு)

வன்னியில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் உள்ள மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய 61 லொறிகள் நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

உலகஉணவுநிறுவனத்துடன் இணைந்து இலங்கை அரசு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. வன்னியை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது முதல் நேற்றுவரை அப்பிரதேசங்களில் உள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதல்களில் 6 பேர் பலி; 15 பேர் படுகாயம்

(வவுனியா)

இடம் பெயர்ந்து கொண்டிருந்த பொதுமக்கள் மீதும் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீதும் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 6 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படை நடவடிக்கைகள் காரணமாக சுண்டிக்குளம் பகுதியில் தங்கியிருந்த-மீண்டும் இடம்பெயர்ந்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது படையினர் நேற்று முன்தினம் காலை கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

இதில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இராசரத்தினம் பாக்கியம் (வயது 37), கிருஷ்ணமூர்த்தி நிதர்ஷனா (வயது 19), இராமசாமி கிருசாமி (வயது 65), மகேஸ்வரி (வயது 18),வினோத் அஜித்தா (வயது 8), ஜெயராசா ரஞ்சினி (வயது 20), கலையரசன் கீதா (வயது 28), தமிழ்நாதன் அன்ரனி ஆகியோர் (12ஆம் பக்கம் பார்க்க)


## இன்னுமோர் ஓடுபாதை கைப்பற்றப்பட்டதாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் 6-வது விமான ஓடுபாதையை நேற்றுக் காலை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இரணைமடு நீர்த்தேக்கத்திற்கு கிழக்காக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 57- வது படைப்பிரிவினரே இந்த விமான ஓடுபாதையைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஓடுபாதை சுமார் 300 மீற்றர் நீளமும் 15 முதல் 20 மீற்றர் அகலமும் கொண்டதாக பாதுகாப்பு (12ஆம் பக்கம் பார்க்க)



உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் நடைமுறைப் படுத்தப்படும் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ்-தென்மராட்சி செயலாளர் பிரிவில் மேசன் தொழிற் பயிற்சியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டப்பணிப்பாளர் சி.பத்மநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் பயிற்சியினை பூர்த்தி செய்த மாணவன் சான்றிதழ் பெறுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## கண்ணிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காயம்

வடமராட்சி கிழக்கு இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிக்கு வரும் வழியில் கண்ணிவெடியில் அகப்பட்ட ஒருவர் காலொன்றை இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றுள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து சுண்டிக்குளம் பகுதியை நோக்கி வந்துகொண்டிருந்த ஒருவரே இவ்வாறு கண்ணிவெடியில் சிக்குண்டு உள்ளார்.

கிருஷ்ணபிள்ளை சுரேஷ்குமார் (வயது-48) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

வலது காலின் பாதப்பகுதியை இழந்துள்ள இவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

குடும்ப உறுப்பினர்களுடன் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துகொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடந்துள்ளது. (ச-5)

## வேம்படியில் கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று தரம்-6 இற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான கால்கோள் விழா கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம் தலைமையில் முதல்முறையாக சிறப்பாக நடை பெற்றது.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், மெதடிஸ் திருச்சபை போதகர் கதிர்காமர், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத் தலைவி திருமதி ஆனந்த குமாரசாமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். (ச-5)

## கணனிப் பயிற்சி நெறி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவினூடாக கணனிப் பயிற்சி நெறியினை நடாத்தவுள்ளது. இப் பயிற்சி நெறியை பயில விரும்புவோர் 3ஆம் கட்டை ஆனைக்கோட்டை எனும் முகவரியிலுள்ள செஞ்சிலுவைச் சங்க கிளை அலுவலகத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலதிக விபரங்களை கிளை அலுவலகத்திலோ 0212222886 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்வதின் மூலமோ பெற்றுக்கொள்ளமுடியும். (ச-14)


## கணனித் தட்டெழுத்து

தமிழ், ஆங்கில மொழிகளில் கணனித் தட்டெழுத்து மிகக் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

* ஆங்கிலம் Page க்கு 13/=
* தமிழ் Page க்கு 15/=

தொடர்புகளுக்கு:
114/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No.:0771276066

(2117)


# அமைச்சர் டக்ளஸ் தலைமையில் கல்வித்துறை சார்ந்த மாநாடு



வடமாகாணத்தின் கல்வித்துறையுடன் தொடர்புடைய உயர்மட்ட மாநாடொன்று நேற்றுக் காலை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்றது.

இம்மாநாட்டின் போது வடமாகாணத்தின் கல்வித்துறை தொடர்பான விட யங்களுடன் யாழ். குடா நாட்டின் கல்வித் துறை சார்ந்த பல்வேறு விடய ங்களும் மிகவும் விரிவாக ஆராயப்பட்டன.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாணத்தின் பிரச்சினைகள் குறித்து ஆராயும் முகமாக தனது அழைப்பின் பேரில் இங்கு வருகை தந்திருக்கும் வடமாகாண பிரதம செயலாளர், கல்விச் செயலாளர், சுகாதார செயலாளர், திட்டப்பணிப்பாளர், யாழ்.மாவட்ட கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை குடாநாட்டின் மக்கள் சார்பாக வரவேற்பதாக தெரிவித்ததுடன், எமது சமூகத் தின் முன்னேற்றம் கருதி வடமாகாணத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் சுதந்திரமாக ஆராய்ந்து நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து கருத்துத்தெரிவித்த வடமாகாண பிரதம செயலாளர், வடக்கின் அபிவிருத்தி குறித்து இன்றைய கால கட்டத்தில் மிகுந்த அக்கறையுடன் தீவிரமான சிந்தனையுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் செயற்பட்டு வருவதாக தெரிவித்ததுடன் கல்வித்துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தினார்.

மேற்படி உயர்மட்ட மாநாட்டில் கல்வித்துறை சார்ந்த விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன் ஏனைய விடயங்கள் குறித்து தனித்தனியாக அடுத்தடுத்த கட்டங்களில் ஆராயப்பட்டு நடைமுறைச்சாத்தியமான தீர்வுகள் எட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## பொங்கல் விழா

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வலிகாமப் பிரதேசம் நடாத்தும் தைப்பொங்கல் விழா சித்தன்கேணி சிவன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபர் செல்வி ஜெயராணி நாகலிங்கமும், சிறப்பு விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளர் பி.சந்திரவேலும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விழாவில் ஆசியுரையினை சித்தன் கேணி ஆலய பிரதம குருவும் சிறப்பு சொற்பொழிவினை காரை எம்.பி.அருளானந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

அதேவேளை பண்ணிசைக்கச்சேரி, சங்கீதக்கச்சேரி, நாடகம், நடனம், பேச்சு, கவிதை, வில்லிசை என்பவற்றை அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்கள் நிகழ்தவுள்ளனர். (ச-14)

## பட்டமேற் கல்வி டிப்ளோமா நுழைவுப் பரீட்சை இன்று

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா 2009/2010 ஆம் ஆண்டுக் கல்வியாளருக்கான நுழைவுப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு யா/இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கு ஏனைய கற்கை நிலையங்களில் இருந்து விண்ணப்பித்தவர்களும் தோற்றமுடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## கட்டிட திறப்பு விழா

(பருத்தித்துறை)

புலோலி தமிழ் இளைஞர் கழகத்துக்கும் புற்றளை சனசமூக நிலையத்திற்குமென சுமார் 18 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மாடிக்கட்டிடம் இன்று சனிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்ற உதவிப் பிரதேச செயலாளர் வி.வீரபத்திரபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கட்டிடத்தை திறந்து வைக்கிறார்.

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய அதிபர் என். அனந்தீஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் பருத்துத்துறை பிரதே சபை செயலாளர் அ.சந்திரயோகன் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர். (ச-52)


## அன்பார்ந்த பாடசாலை அதிபர்களே!

2008 க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் 3A மற்றும் 2A B பெற்ற சகல மாணவர்களையும் இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து பாராட்டி கௌரவிக்கவுள்ளது.

உங்கள் பாடசாலையில் 3A, 2A B பெற்ற மாணவர்களினது பெயர் விபரங்களையும் அவர்களின் புகைப்படங்களையும் உறுதிப்படுத்தி,

"உயர்தர மாணவர் கௌரவிப்பு-2008"
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:*
தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சைப் பெறுபேற்றின் பிரதியுடன் புகைப்படத்தையும் வலம்புரி அலுவலகத்தில் நேரில் ஒப்படைத்து தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளவும்.

நன்றி

இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி,
யாழ்ப்பாணம்.

# இன்று ஒரு தகவல்

## மாறுவது மனம்

ஒருவர் மிக்க மகிழ்ச்சியுடன் வந்துகொண்டிருந்தார். "என்ன விஷயம்?" என்று விசாரித்தேன்.

"நான் தோற்றுப் போய்விட்டேன் அதுதான் மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார்.

எனக்கு வியப்பாக இருந்தது.

இந்த உலகத்தில் தோற்றுப் போகிறவர்கள் யாராவது மகிழ்ச்சியாக இருப்பதுண்டா?

"எங்கே தோற்றுப் போனீர்கள்?" என்று கேட்டேன்.

"என்னுடைய 5 வயதுக் குழந்தையுடன் நான் விளையாடிக் கொண்டிருந்தேன். அந்த விளையாட்டில் என் குழந்தை ஜெயித்துவிட்டது. நான் தோற்றுவிட்டேன்" என்றார் ரொம்ப உற்சாகமாக.

நான் யோசித்துப் பார்த்தேன்.

நாம் சின்னக் குழந்தையாக இருந்த போது எந்த விளையாட்டில் கலந்துகொண்டாலும் அதில் நாம் தான் ஜெயிக்க வேண்டும் என்ற ஒரு வெறி நமக்குள் இருக்கும். நம்மை எதிர்த்து விளையாடுபவர் நல்லவரா,கெட்டவரா, பெரியவரா, சின்னவரா என்பதெல்லாம் முக்கியமில்லை. அவர் தோற்றுப் போக வேண்டும் அதுதான் முக்கியம். எதிரியை சந்தோஷப் படுத்த விளையாடும் கலை அப்பொழுது நமக்குத் தெரிவதில்லை.

வாழ்க்கையில் ஒரு பக்குவம் வந்த பின்னர் வெற்றி வெற வேண்டும் என்ற மன அழுத்தம் போய்விடுகிறது. போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்பதைவிட குழந்தையை சந்தோஷப் படுத்த வேண்டும் என்பது முக்கியமாகப் போய்விட்டது. ஜெயிக்க வேண்டும் என்ற வெறி ஓடி விட்டது.

ஒரு குழந்தையாக இருந்த பொழுது நம்முடைய வளர்ச்சிக்கு உதவிய வெற்றி, வெறி, பெரியவனான பின்னர் நமக்கு எதிரியாக மாறுகிறது. அதைச் சரியான சமயத்தில் உணர்ந்து கொண்டால் போதும்... நாம் பிழைத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மனிதனுமே வாழ்வின் அடுத்த கட்ட வளர்ச்சியில் அடியெடுத்து வைக்கும் நேரத்தில், தன்னிடமிருந்து ஏதோ ஒரு குணத்தை அல்லது தன்னுடன் இருந்த ஏதோ ஒரு உறவை இழக்க வேண்டியிருக்கிறது என்கிறார். உலகப் புகழ் பெற்ற உளவியல் மேதை எம். ஸ்காட்பெக்.

ஒரு கட்டம் வரைக்கும் உதவியாக இருக்கும் குணம் அடுத்த கட்டத்துக்கு தடையாகக் கூட மாறிவிடலாம் என்கிறார் அவர்.

இந்த பரிமாண மாற்றத்துக்கு உள்ளாகும் ஒவ்வொருவரும் பிரத்தியட்சமாக இதை உணர்கிறார்கள். ஆனால் பல பேர் பழசையெல்லாம் துறந்துவிட்டு புதிய கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள இஷ்டமில்லாமல் இருந்து விடுகிறார்கள். அல்லது அப்படிச் செய்ய முடியாமல் தவிக்கிறார்கள். இதையெல்லாம் மீறி பழசைத் துறந்துவிட்டால் அதை இழந்ததால் உண்டாகும் மன அழுத்தம் சில காலத்துக்கு வருத்திக் கொண்டுதான் இருக்கும் வேறு வழியில்லை.

ஆரோக்கியமான ஒரு முன்னேற்றத்திற்காக அந்த மன அழுத்தத்தை தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்கிறார் ஸ்காட்பெக்.

பிறந்த நாள் முதல், இதுதான் சரி என்று கற்பிக்கப்பட்டு வந்த ஒவ்வொரு தத்துவத்தையும் தங்களின் வளர்ச்சிக்குத்தகுந்த மாதிரி மாற்றி அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாமல்... வாழ்க்கைச் சூழலில் அரைபட்டு தூளாகிறவர்கள் தான் அதிகம் தவிக்கிறார்கள்.

பெரும்பாலும் மனிதர்களின் நடுத்தர வயதில் அதாவது முப்பதைத் தாண்டும் சமயத்தில் தான் இந்த தவிப்பு உண்டாகிறது. இதைத்தான் மேற்கத்தைய நாடுகளில் அடிக்கடி Mid - Life Crisis என்று சொல்கிறார்கள்.

அவ்வப்போது பழசையெல்லாம் தொலைத்துவிட்டு புதுசு புதுசாக பிறக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிமிடத்தையும் அந்த நிமிடத்துக்கு ஏற்ற சித்தாந்தம் கொண்டவர்களாக சந்திப்போம் என்கிறார் அந்த உளவியல் நிபுணர். அப்படிப் பழகிக் கொண்டால் வாழ்க்கை இன்பமயம். இல்லையென்றால் தவிப்பு மயம்தான். பழசைத் தொலைக்க முடியாதவர்களில் எத்தனையோ ரகம் உண்டு.

ஒருவர் நண்பர் வீட்டுக்குப் போனார். அவர்கள் ஏதோ இனிப்புப் பலகாரம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்கள். இவர் சாப்பிட்டு பார்த்துவிட்டு சொன்னார்.

"சேர் ... ஆறு மாதத்துக்கு முன்னர் ஒரு தடவை இங்கே வந்தேன். அப்பொழுது ஒரு இனிப்புப் பலகாரம் கொடுத்தீர்கள். அது இதைவிட நல்லா இருந்தது" என்றார்.

"அப்பொழுது செய்த அதே இனிப்புப் பலகாரம் தான் சேர் இதுவும்..!" என்றார் இவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வாகன உடமை மாற்றம் தொடர்பான விநியோகிக்கப்படாத கடிதங்கள் யாழ். அலுவலகத்தில்

(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் இருந்து பதிவுத் தபால் மூலம் வாகன உடமையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த உடமை மாற்றம் தொடர்பான வாகன பரிசோதனைக் கடிதங்கள் உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் யாழ். மாவட்ட போக்குவரத்து உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

உரிமையாளர்களின் பெயர் மற்றும் வாகன இலக்கங்களின் விபரம் வருமாறு,

NP MA - 6442 பி. கந்தசாமி, EN - 4712 ரி. கணேசலிங்கம், NP JY - 7108 ரி. சுகிர்தன், NP KC - 4098 கே. உதயகுமார், NP HE - 8660 எஸ். சித்திரவடிவேல், NP MN - 8581 ஆர். வசிகரன், 26- 0736 ஏ. பொன்னம்பலம், 500 - 0820 எஸ். முத்துராஜா, NP HB - 7435 கே. நாகேஸ்வரி, NP GK - 1851 ஆர். கோபிநாத், NP JG - 1115 ஆர். ராஜரூபன், 64 - 2451 ஆர். ராஜரூபன், NP HA - 6815 எம். ஜெகதீசன், NP GA - 8784 ஜே. கே. பத்மநாபன், 251-4105 ரி. குணசிங்கம், NP GI - 7778 பி. சஜீவானந்தன், NP JD - 6972 எஸ். கந்தரூபன், NP MA - 8389 ரி. றேஸ்காந்தன், NP JI - 7880 ரி. உதயகுமார், NP HF - 4037 இ. ஆர். ஜெயசிங்கம், NP MQ - 3569 எஸ். சிவாஜினி, NP GA - 8734 ஏ. அனுசியஸ், NP GK - 1626 கே. சுகந்தி, 500 - 1886 எஸ். ராசம்மா, NP JV - 9971 பி. இலங்கநாதன், NP MA - 6917 ஜி. கமலநாதன், 153 - 9000 கே. ரவீந்திரன், 500 - 1471 கே. முருகையா, NP MC - 7688 எஸ். சிறீபிரதாப், 36 - 0826 கே. கந்தசாமி, NP GA - 8846 எஸ். சண்முகராஜா.

204 - 8036 எஸ். விக்கினேஸ்வரன், 500 - 2932 ரி. மகேந்திரன், NP GD - 3000 வி. நக்கீரன், NP JL - 2620 ஏ. விமலகுமார், NP ME - 6903 எஸ். அகிலன், NP JH - 4118 பி. சுகந்தன், NP MA - 7416 எஸ். எம். குமார், NP GO - 3933 ரி. ஏ. செல்வராஜா, 500 - 2178 எஸ். மார்க்கண்டு, 500 - 6395 ஏ. தங்கராஜா, NP HA - 6761 பி. காண்டீபன், NP HY - 7716 எம். கதிரேசன், NP HV - 5609 எஸ். எஸ். குமார், 26 - 9627 எஸ். துரைராஜா, NP GX - 5859 பி. செல்வேந்திரன், 72 - 7024 பி. செல்லமுத்து, 27 - 4019 கே. ஜெயபாலசிங்கம், NP JK - 6867 எஸ். பாலசிங்கம், NP JR - 1486 எஸ். சசிகரன், NP EN - 9287 கே. நாகராஜா, NP GH - 5980 ரி. தியாகேஸ்வரன், NP JX - 8750 கே. பிரசாத், 500 - 3498 ரி. தேவகுமார், 156 - 2203 ஈ. என். லோரன்ஸ், NP GS - 9336 டபிள்யூ. முகுந்தன், NP TW - 4597 ஆர். செல்வரத்தினம், NP MD - 6908 வி. ரவீந்திரகுமார், NP HH - 0738 எஸ். உமாபாலன், 37 - 5323 வை. துஷ்யந்தி, 67 - 3666 வை. துஷ்யந்தி, NP JJ - 6529 பி. இராமச்சந்திரன், NP HW - 4485 எஸ். சிவதாஸ் 157 - 6587 ரி. அனுசன், NP JU - 1694 ரி. சுகிதரன்.

500 - 4135 வி.எஸ். சுந்தரம், NP HM - 1959 ரி. கே. சுதர்சன், NP JG -9877 வி.ஏ. கஜேந்திரன், NP JN - 3418 எஸ். மாயவர்ணன், NP JM - 5434 கே. தம்பையா, NP MI - 8866 எஸ். இராமாநந்தன், 205 - 6272 என். ஜெகதீஸ்வரன், NP QA - 0767 ஜே. பிரதாபன், 14 - 5641 பி. ஜே. ஜெயக்குமார், NP GA - 8784 ஜே. கே. பத்மநாபன், 160 - 5160 பி. சாந்தரூபன், 88 - 3296 ரி.கே. முருகையன், NP GZ - 8341 எம். கமலராஜ், NP MB - 4177 எம். ரவிந்திரன், NP HJ - 1988 ரி. விஜயகுமார், NP GZ - 5591 ஏ. ஜெயகாந்தன், NP HZ - 58 59 ரி. குமாரசாமி, NP JT - 7564 பி. மகாதேவன், NP MF - 7043 எம். ஜ. பதுர்சமன், NP HX - 3372 எம். பாலசுப்பிரமணியம், NP HZ - 1574 எஸ். மரியசீலன், NP HZ - 1574 எம் மரியசீலன், NP GO - 6390 எஸ். தீபன், 500 - 8580 பி. குலவீரசிங்கம், NP MI - 6372 கே. அருளானந்தம், 7 - 9393 ஏ.பி. இராஜநாயகம். (ஓ-7)

# இராசி பலன்

17.01.2009
(தை4, சனிக்கிழமை)
அத்தம் பிற்பகல் 5.06 மணிவரை
ஸப்தமி பின்னிரவு 1.18 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சுபநேரம்3.35-5.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உறவினர் உதவி, ஜனவசியம், எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை. |
| இடபம் | குடும்பக் கவலை, பண விரயம், விதண்டாவாதம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | ஆரோக்கியம், புதிய முயற்சி, தெய்வ சிந்தை, நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | சுப செலவு, சயன சுகக் குறைவு, காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு. |
| சிங்கம் | சகோதரர் உதவி, புகழ், மன மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும். |
| கன்னி | அதிக பிரயாசை, புதிய திருப்பம், அதிகாரம், நல்ல செய்தி. |
| துலாம் | பிரயாணம், சரீரப் பிரயாசை, ரோகநிலை, கட்டுப்பாடு. |
| விருச்சிகம் | ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், வாகன பயம், அபகீர்த்தி. |
| தனுசு | சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வசிந்தை, குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. |
| மகரம் | அதிகாரம், போசன சுகம், உடல் நலம், நல்ல முயற்சி. |
| கும்பம் | தாழ்ந்த சுபாவம், பூர்வ புண்ணிய கருமம், பணக்குறைவு, முயற்சி தாமதம். |
| மீனம் | சுபகாரியச் செலவு, மனச்சோர்வு, தெய்வ சிந்தை, மாதா சுகம். |

வளவன்

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோருக்கு இலங்கை வங்கியின் ரண் கெகுளு புலமைப் பரிசில்கள்

இலங்கைவங்கி ரண்கெகுளு சேமிப்புக்கணக்கு வைத்திருக்கும் ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க விண்ணப்பங்களை கோரியுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாணவர்கள் தாம் கணக்கு வைத்திருக்கும் கிளையில் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு இலங்கை வங்கியால் கோரப் பட்டுள்ளது. கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா 2ஆயிரத்து 500 ரூபா பேணப்பட்டிருத்தல் அவசியம்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பிள்ளையின் பெயர் விலாசம், பரீட்சை இலக்க பாடசாலை மற்றும் மாவட்ட பரீட்சைப் பெறுபேறின் மாவட்ட நிலை ரண் கெகுளு கணக்கு இலக்க ஆகிய சுய விபரங்களுடன் தகவல்கள் சரியானதென பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கைவங்கி ஒவ்வொரு வருடமும் நாடு முழுவதும் 1250 பேருக்கு ஆண்டு ஐந்துக்கான புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது. இப்புலமைப்பரிசில் தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியுடையன.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு 1000 புலமைப்பரிசில்களும் மாவ ட்ட ரீதியாக 25 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் பத்து மாணவர்கள் என்ற அடிப்படையில் 250 மாணவர்களுக்கான பரிசில்களும் மொத்தமாக 1250 புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஓ-134)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 550 | 600 |
| தக்காளி | 400 | 600 |
| அவரை | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 |
| கோவா | 120 | 140 |
| கரட் | 140 | 160 |
| பூசணி | 70 | 80 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 |
| பாகற்காய் | 200 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 100 |
| கரணைக் கிழங்கு | 25 | 40 |
| பயிற்றங்காய் | 140 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 |
| போஞ்சி | 160 | 200 |
| கீரை – 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |

(7)

## ஆன்மீக நிகழ்வு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் தை பிறந்தால் வழி பிறக்கும் எனும் விடயம் பற்றி தபாலதிபர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ரி.ரி சண்முகநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## கியூடெக் -ஹரித்தாஸ் நிறுவனத்தால் உடுபுடவைகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கியூடெக்-ஹரித்தாஸ் நிறுவனம் நிஷா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடுபுடவைகளை வழங்கி வருகிறது.

அந்தவகையில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 400 குடும்பங்களுக்கும், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 150 குடும்பங்களுக்கும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 150 குடும்பங்களுக்கும் உடுபுடவைகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நேற்றைய தினம் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 150 பேருக்கு உடுபுடவைகள் வழங்கப்பட்டன.


இதேவேளை இந்நிறுவனத்தால் யாழ். வலயத்திலுள்ள 45 பாடசாலைக் கிணறுகள் இறைக்கப்பட்டு குளோரின் இடும் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## கழிவு நீர் வழிந்தோட வகை செய்யப்படுமா?

(யாழ்ப்பாணம்)

யாழ்.மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்கு அருகில் உள்ள வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் நிலைய ஊழியர்களும், வருகை தரும் வாடிக்கையாளர்களும் பல அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதால் மழைகாலங்களை விட வெய்யில் காலங்களிலேயே அதிக துர்நாற்றம் வீசுவதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-36)




## கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற் குழுக் கூட்டம் நாளை மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலைஞர் விபரத் திரட்டு வெளியீடுசம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. எனவே செயற்குழு உறுப்பினர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

# மாதிரிக் கிராம வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

மாளிகைத்திடல் குடத்தனை மாதிக் கிராம வேலைத்திட்ட கருத்தூட்டல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு குடத்தனை தையல் நிலையத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் " கல்வி பெற்றுக்கொள்வது தொடர்பான மேம்படுத்தல் நடவடிக்கை" பற்றி கைத்தொழில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் சிவநாதன்,சிறுவர் உரிமை என்றால் என்ன? என்பது பற்றி உதவி சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மா. பத்மராஜ், " மாணவர்களின் ஆளுமை விருத்திப் பண்புகள்" பற்றி பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. சாந்தகுமார், இலட்சியத்தை தீர்மானித்தலும் அதை அடைவதற்கான வழிமுறைகளும் பற்றி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் மா.சிறீஸ்கந்தகுமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ஓ-4)

# கோண்டாவில் சித்தவைத்திய நிலையத்தில் ஆயுள்வேத மருந்து உற்பத்தி வேலைகள்

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் இலவச சித்த வைத்திய நிலையத்தில் ஆயுள்வேத மருந்து உற்பத்திக்கான வேலைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் வைத்திய நிலையத்திற்கு உரும்பிராய், ஊரெழு, கோப்பாய் பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையில் நோயாளிகள் வருவதனால் அவர்களுக்கான மருந்து உற்பத்தியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான உபகரணங்கள், உதவிகள், ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு குறிப்பாக பரம்பரை வைத்தியர்களை வைத்திய அதிகாரி கோரியுள்ளார். (ஓ-36)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு லயன்ஸ் கழகத்தினால் வீடுகள் கையளிப்பு

வடமராட்சிப் பகுதியில் சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட 280 பொது மக்களுக்கு, சர்வதேச லயன்ஸ் நிதியம் வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதில் 140 வீடுகள் பயனாளிகளுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை கையளிக்கப்படவுள்ளது. இதில் திக்கம் பொது மண்டபத்தில் பிற்பகல் 2.50 மணிக்கு 30 வீடுகள் கையளிக்கப் படும்.

அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலைக்கு அண்மையிலுள்ள பொது மண்டபத்தில் 30 வீடுகள் பயனாளிகளுக்கு பிற்பகல் 3.00 மணிக்கு வழங்கப்படும்.கெருடாவில் கொலணியில் பிற்பகல் 3.30 மணிக்கு 40 வீடுகள் வழங்கப்படும்.கெருடாவில் மண்டபக்காட்டில் 3.40 மணிக்கு 40 வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

பின்னர் பிற்பகல் 3.50 மணிக்கு தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் பொதுக் கூட்டம் சர்வதேச லயன்ஸ் நிதியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வின் தலைவராக சர்வதேச லயன்ஸ் நிதியத் தலைவர் லயன் மகேந்திரா அமரசூரியா M.J.F தலைமை தாங்குவார்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. க. கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பீரதேச செயலர் இ.வரதீஸ்வரனும் மாவட்ட ஆளுனர் 306 B1 லயன் நிமால் ராஜபக்ஷவும், முன்னாள் மாவட்ட ஆளுனர் லயன் எஸ். இராகவன் M.J.F ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் எஸ். தவச்செல்வம் அறிவித்துள்ளார். (ஓ-19)

## நன்றி நவில்வோம் நற்பெரும் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ கல்கி ஆன்மீக மையத்தினால் நடத்தப்படும் நன்றி நவில்வோம் நற்பெரும் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியால்ய மாணவிகளின் நாட்டிய நடனம், சங்கீத வித்தியா சாகரம் சாகித்திய சாகரம் லய கலாநிதி உ. ராதாகிருஷ்ணனின் வயலின், இசை மற்றும் நாதஸ்வர கான விநோத் பி. எஸ். பாலமுருகன் குழுவினரின் மங்கள வாத்தியம் என்பன இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்துஸ்ரீஅம்மாபகவானின் பாதுகை தரிசனமும் இடம்பெறவுள்ளது. (6)

## க.பொ.த.(உயர் தர) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள் சில...

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

**கலைப்பிரிவு**

2A, B - த.துர்க்கா, செ.துர்க்காயினி, ம.ஜனனி

2A, C - க.கயாளினி

A, 2B- செ.செல்வராணி, ம.மேரிஆன்

**வர்த்தகப் பிரிவு**

A, 2B - ப.ஜனனி

**உயிரியல் பிரிவு**

2C,S - அ.சஞ்சீவ்

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி கடந்த 10 ஆம் திகதி அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கண்ணகி வி. கழகத்தினை எதிர்த்து நாவலர் வி. கழகமும், பிற்பகல் 4 மணிக்கு வெஸ்ரோம் வி. கழகத்தினை எதிர்த்து நியூ ஒற்றுமை வி.கழகமும் மோதவுள்ளன. அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு புவனேஸ்வரி அம்பாள் வி.கழகத்தினை எதிர்த்துசிந்து வி. கழகமும், பிற்பகல் 4 மணிக்கு காந்தரூபன் வி. கழகத்தினை எதிர்த்து ஈஸ்வரி வி. கழகமும் மோதவுள்ளன. (ஓ-4)

## விக்ரம்ராஜன் கங்கு ஞாபகார்த்த கிரிக்கெற் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கடந்த 10 ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் 'விக்ரம் ராஜன் கங்கு' ஞாபகார்த்த கிரிக்கெற் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மானிப்பாய் பாரீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது.

அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது. (ஓ-6)

## அதிபர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல அதிபர்களுடனான கலந்துரையாடல் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெறவுள்ளது. அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## கணிதபாடம் II முன்னோடிப் பரீட்சை

வடமராட்சி கல்வி வலயத்தில் 2008 டிசம்பரில் க.பொ.த. சா/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணிதப் பாடம் II க்கான முன்னோடிப் பரீட்சை நாளை மறு நாள் திங்கட்கிழமை அவ்வவ் பாடசாலைகளில் நடத்தப்பட உள்ளதாக வடமராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஷ்பலிங்கம் தெரிவித்துள்ளார்.

உரிய மாணவர்கள் தவறாது சமுகமளித்து பயன்பெறுமாறும் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-19)

## யோகாசன வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத பீடத்தில் (வேதாந்த மடம்) இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் புதிய யோகாசன வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஆண், பெண், சிறியோர், பெரியோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ளலாம் என வேதாந்த மட பீடாதிபதி ஸ்ரீ மத் வேத வித்தியாசாகர சுவாமிகள் அறிவித்துள்ளார். (ஓ)

## மக்கள் நலன் கருதிய நூலக சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகம் வாசகர்களின் நலன் கருதி காலை 7 மணிக்கு திறக்கப்படுவதாக நூலகர் திருமதி. பி. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ஓ-29)



நிஷா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கியூடெக்-ஹரித்தாஸ் நிறுவனத்தால் அண்மையில் யாழ்.பிரதேச செயலகத்தில் வைத்து உடுபுடவைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார், யாழ்.பிரதேச செயலர் மரியதாஸ் ஜெகூ ஆகியோர் உடுபுடவைகள் கையளிப்பதையும், அருகில் கியூடெக்-ஹரித்தாஸ் நிறுவன இயக்குநர் கி.ஜோ. ஜெயக்குமார் அடிகள் நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 42

## ஆதி இரும்புக் காலம்

தென்னிந்தியா – இலங்கைப் பிராந்தியத்தில் நடைபெற்ற சமஸ்கிருத மயமாக்கத்தைப் பொருளாக வைத்து எழுந்த கதைகள் பெரும்பாலும் பாளி வரலாற்றேடுகளிலும் பாளி ஜாதகக் கதைகளிலும் சமஸ்கிருத காவிய புராணங்களிலும் பேணப்பட்டு இன்று கிடைக் கின்றன. இவை ஒரு சில தமிழ் நூல்களிலும் காணப் படுகின்றன.பின்னொரு கட்டத்தில் இவை சீன பௌத்த நூல்களிலும், சமஸ்கி ருத பௌத்த நூல்களிலும் சேர்த்துக் கொள் ளப்பட்டன.

*மேற்கூறிய கதை அமைப்பு முறையின் முக்கிய கூறுகள் பின்வருமாறு,*

நாகரிக முன்னேற்றமடைந்த தலைவன் ஒருவன் (பிராமண அல்லது க்ஷத்திரியத் தலைவன்) திட்டமிட்டோ, தற்செயலாகவோ தென்னிந்தியா- இலங்கைத் துறை/நகர மையம் ஒன்றுக்கு வருதல்; அவ்விடத்தில் வாழும் பின்தங்கிய சுதேசிகளை மனிதரல்லாத பிறவிகளாக வர்ணித்தல் ; சுதேச உயர் குழாத்தினர்/ தலைவர்கள் புதிதாக வந்த தலைவனுடன் முரண்பாட்டில் ஈடுபடல் ; இரு சாராருக்கும் இடையில் அமைதியுறவு ஏற்படல்; ஒரு முக்கியமான சுதேசக் கன்னியைப் புதிய தலைவன் மணம் முடித்தல் ; புதிய தலைவன் ஆட்சிப்பொறுப்பை ஏற்று வட இந்திய முறைப்படி ஓர் அரச மரபைத் தொடக்கி வைத்தல்; பிராமணீயச் சடங்குகளும் கருத்துக்களும் ஆட்சி முறையில் சேர்கப்படுதல் ; புதிய ஆட்சியாளன் தன்னை வட இந்திய அரச மரபொன்றுடன் இணைத்துக் கொள் ளல் ; பிராமணப் புரோகிதர் ஒருவர் நியமிக் கப்பட்டு சமஸ்கிருத மொழி செல்வாக்குப் பெறுதல் ; சுதேச உயர் குழாத்தினர் தம் பெயர் களை சமஸ்கிருதப் பெயர்களாக மாற்றிக் கொள்ளல்; இடப்பெயர்களும் சமஸ்கிருத வடிவைப் பெறுதல் . இவ்வாறாக வட இந்தியப் பண்பாட்டு வழக்கங்களும் மரபுகளும் தென் னிந்தியா-இலங்கைப் பிராந்தியத்துக் குறுநில அரசுகளில் பரவுவதற்கு வழி திறக்கப் பட்டதை இக் கதைகள் வெளிப்படுத்துகின்றன.

தென்னிந்தியா, இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசியா தொடர்பான சம்ஸ்கிருத மயமாக்கக் கதைகளின் பொதுக் கூறுகள்

| பொதுக்கூறுகள் | அகத்தியர் கதைகள் | பரசுராமர் கதைகள் | அர்ச்சுனன் கதைகள் | விஜயன் கதைகள் | கௌண்டின்யர் |
|---|---|---|---|---|---|
| பிராமண/ க்ஷத்திரிய தலைவன் வருகை | பிராமணரிஷி தலைவன் | பிரமாணத் தலைவன் | க்ஷத்திரியத் தலைவன் | க்ஷத்திரியத் தலைவன் | பிராமணத் தலைவன் |
| மனிதரல்லாதோர் சுதேசிகளாக வாழ்தல் | இராக்கதர் | பிராமணரல்லாதோர் | நாகர்/ நிசிடர் | இயக்கர் | நாகர் |
| சுதேசிகள் எதிர்ப்பு/ சுதேசிகளுடன் முரண்பாடு | வாதாபி, இல்வளன் எதிர்ப்பு | பிராமணரல்லாதோர் எதிர்ப்பு | நாகர் / நிசிடர் எதிர்ப்பு | தோழர்களை இயக்கக் கன்னிகை சிறைப்படுத்தல் | நாக கன்னிகை நாகர் எதிர்ப்பு |
| மேலான அறிவு / வலு ஆதிக்கம் பெற உதவுதல் | மேலான அறிவும் ரிஷி வலுவும் சுதேசிகளை அடக்க உதவுதல் | மேலான ஆயுதம் (பரசு) / வலு சுதேசிகளை அடக்க உதவுதல் | மேலான போர்த் திறன் (வில்வித்தை) அடக்க உதவுதல் | மேலான வலு சுதேசிகளை அடக்க உதவுதல் | மேலான ஆயுதபலம் (வில்) சுதேசிகளை அடக்க உதவுதல் |
| வெற்றியும் சுதேசிகளுடன் நட்புறவும் | இராக்கதரை வென்றபின் தென்னாட்டின் முனிவராதல் | வெற்றியின்பின் பிராமணர்குடியேற்றம் | சுதேசிகளுடன் போராடி வெற்றிபெறல் | இயக்கர்களுடன் போராடி வெற்றி பெறல் | நாகருடன் போராடி வெற்றிபெறல் |
| தலைவன் சுதேசப் பெண்ணை மணம் முடித்தல் | தென்னாட்டுப கன்னிகையை மணம் முடித்தல் | - | நாக கன்னிகையை மணம் முடித்தல் | இயக்கக் கன்னிகை யை மணம் முடித்தல் | நாக கன்னிகை மணம் முடித்தல் |
| பிராமணீய முறைகளையும் தத்துவங்களையும் அறிமுகப் படுத்தல் | வேதநூல் அறிவைத் தென்னாட்டில் பரப்புதல் | பிராமணீயச் செல்வாக்குப் பரவுதல் | - | பிராமணீய முறைப் படி முடிதரித்தல் | நாகஅரசின்ஆட்சியைப் பெற்றுப் பிராமணிய முறைகளைப்புகுப்புதல் |

அகத்தியர், பரசுராமர்,அர்ச்சுனன்,கௌண்டின்யர்,சோழர்,பாண்டியர் மற்றும் பல்லவர் ஆகியோர் பற்றிய கதைகள் மேற்கூறிய கதையமைப்பு முறையின் பல்வேறு கூறுகளைச் சிறு மாற்றங்களுடன் கொண்டுள்ளன. அகத்தியர் பற்றிய கதைகளும் பரசுராமர் பற்றிய கதைகளும் பிராமணத் தலைவர்கள் தென்னிந்தியாவுக்கு வந்து அங்கு எதிர்ப்புத் தெரிவித்தோரை அடக்கிய பின் குடியேறியமை பற்றியவை. அர்ச்சுனன் கதைகளும் விஜயன் கதைகளும் க்ஷத்திரியத் தலைவர்கள் பற்றியவை. இத் தலைவர்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் சென்று, தாம் சந்தித்த பின்தங்கிய மக்களை அடக்கி வெற்றி கொண்டு,அம் மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த முக்கிய கன்னியரை மணம் முடித்தமை,அதன் பின் அம்மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தியமை போன்ற விடயங்கள் பற்றி இக் கதைகள் கூறும். கௌண்டின்யர் பற்றிய கதைகள் விஜயன் மற்றும் அர்ச்சுனன் பற்றிய கதைகளை ஒத்தவை. ஒரு முக்கிய வேறுபாடு என்னவெனில் கௌண்டின்யர் ஒரு பிராமணத் தலைவர், அவர் சென்ற இடம் தென் கிழக்காசியாவின் ஒரு நாடு. இந்தக் கதைகளில் புதிதாக வந்த தலைவர்கள் மணம் முடித்த பெண்கள் மனிதரல்லாத இனங்களைச் சேர்ந்தவர்களாகக் கூறப்படுகின்றது.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

பொதுவாக, சமஸ்கிருத மயமாக்கம் நடைபெறாத பின்தங்கிய இடங்களில் வாழ்ந்தோர் அவ்வாறு இக் கதைகளில் வர்ணிக்கப்பட்டுள்ளனர். சோழர்,பாண்டியர்,பல்லவர் ஆகிய வம்சத்தவர் பற்றிய கதைகளில் வட இந்திய வம்சங்களுடன் இவர்கள் இணைக்கப்படுவதைக் காணலாம். இதனால் இவ் வம்சங்களை தோற்றுவித்தோரும்,வட இந்தியாவிலிருந்து வந்த தலைவர்கள் என்பது மறைமுகமாகக் கூறப்படுகின்றது எனலாம். (தொடரும்)

# மும்பையில் மூன்று மணி நேரம் 6



TATA

தாஜ்ஹோட்டலில் வேலை செய்த காலத்தைப் பெருமையுடன் நினைவுகூர்ந்த அவர் அது கட்டப்பட்ட கதையையும் எங்களுக்குக் கூறினார். இது இந்தியாவில் பிரசித்தி பெற்ற வியாபாரக் குடும்பமான TATA சந்ததியினருக்குச் சொந்தமானது. ஆங்கிலேயர் காலத்தில்TATA என்ற பெயர் கொண்ட பிரபல வர்த்தகர் மிக செல்வச் செழிப்புடன் வியாபாரத்தை நடாத்தி கௌரவத்துடன் வாழ்ந்து வந்தார். இதற்குப் பக்கத்தில் ஒரு சாதாரண கட்டடத்தைக் காட்டி இது ஆங்கிலேயர் காலத்தில் அவர்கள் கூடும் கேளிக்கை விடுதியாக இருந்தது என்றும் ஆங்கிலேயர் அதாவது வெள்ளையர்களாகிய ஐரோப்பியர்கள் மட்டும் அங்கு சல்லாபித்திருந்தனர் என்றும் கூறினார். ஒரு முறை TATA எனும் தனவந்தர் அங்கு சென்றபோது அவரை வெள்ளையர்கள் உட்செல்ல அனுமதிக்கவில்லை அதனால் அவமானமும் ஆத்திரமுமடைந்த இன்றைய புகழ்வாய்ந்த TATA COMPANY யில் முன்னோடியான அப் பெரிய மனிதர் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்ட ஆவேசம் கொண்டு உடனேயே வெள்ளையர்களின் விடுதிக்குப் பக்கத்தில் ஒரு பெரிய காணியை வாங்கி 'இருகோடுகள்' பாணியில் மிக விரைவாக அரண்மனை போன்ற வசதிகளும் அடுக்குமாடியுமான இந்த தாஜ்ஹோட்டல் கட்டிமுடித்தார்.

" தோல்விகளே வெற்றிகளின் தூண்கள்" (Failure are the pillers of success) என்ற முதுமொழிக்கிணங்க செயற்பட்டு இச்சாதனையைப் புரிந்தாராம். இன்று வெள்ளையரின் கட்டடம் இதனுடன் ஒப்பிடும்போது ஒரு சிறிய கொட்டில் போல தாஜ்ஹோட்டல் -100 மடங்குகள் பெரியது எனலாம்) பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. இவ்வாறு தாஜ்ஹோட்டல் கதையை ராஜா எமக்குக் கூறி முடிக்கும் நேரம் துறைமுகம் நின்ற கப்பல்களும் பக்கத்தில் அமைந்திருந்த Gate way of India வும் கண்களுக்குப் புலப்படத் தொடங்கின. இந்த அதிகாலை நேரத்தில் தாஜ்ஹோட்டல் முன்பாக உள்ள துறைமுக ஒதுங்கு கரையில் பல இளவட்டங்கள் நீரில் சுழியோடி ஏதோ தேடித்தேடி எடுத்துக் கொண்டிருந்தனர். இதுபற்றி வழிகாட்டி ராஜாவிடம் விசாரித்தபோது பின்வருமாறு கூறினார். மராட்டி மக்கள் தமது நேர்த்திக் கடன்களை செய்து ஒரு மிதக்கும் கலசத்தில் தெய்வ ஆராதனைக்குரிய பொருட்களுடன் தமது இயல்பிற்கேற்ப செப்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களையும் வைத்து கடலில் சங்கமிக்க விடுவார்களாம். அவை கரையொதுங்கும் இடமாக தாஜ்ஹோட்டல் பகுதி அமைந்திருப்பதால் அவை கடைசியில் இங்கு அவையுடனும் துறைமுக எல்லைச்சுவருடனும் மோதி நீரில் அமிழ்ந்து போகின்றன. இவற்றை எடுப்பதற்காகவே இளைஞர்கள் காலையிலே இங்கு இவ்வண்ணம் நீரில் சுழியோடித் தேடுகிறார்கள். விலையுயர்ந்த தங்க நாணயங்களும் கிடைக்குமாம்.

### GATE WAY OF INDIA

அழகிய Taj Hotel க்கு முன்பாக துறைமுகத்துடன் சேர்ந்து " இந்தியாவின் நுளைவாயில்" எனும் சரித்திரப் புகழ்பெற்ற தலைவாசல் கட்டடம் அமைந்துள்ளது. இது டெல்லியில் உள்ள India Gate அல்ல (இரண்டும் வெவ்வேறானவை) இக்கட்டடம் நாங்கள் அன்று பார்த்தபோது பழமையை பாதுகாக்கும் பொருட்டு, புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆரம்பத்தில் பொம்பாயைப் பற்றி கூறியதிலிருந்து இது ஒரு சிறிய தீவாக இருந்த சரித்திரத்தை அறிந்திருப்பீர்கள். 1348 ஆம் ஆண்டு இஸ்லாமியரின் படையெடுப்பால் வெற்றி கொள்ளப்பட்டு குஜராத் ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாகியது. 1534 இல் குஜராத்தின் அரசனாகிய சுல்தான் பகதூர் சா பொம்பேத் தீவினை போர்த்துக்கேயருக்கு கையளித்தான். 1661 இல் 2ம் சாள்ஸ் அரசனுக்கும் போர்த்துக்கல் அரசனின் சகோதரியாகிய Braganza (பிரகன்சா) வைச் சேர்ந்த கதற்றலுக்குமிடையே ஏற்பட்ட விவாகத்தின் காரணமாக இத்தீவு திருமண ஒப்பந்தத்தின் பிரித்தானிய கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இத் தீர்வை அரசன் 1668 இல் கிழக்கிந்தியக் கம்பனிக்கு வழங்கினான் என்று சரித்திரம் சான்று பகர்கின்றது.

இந்த நுழைவாயில் ஒரு சரித்திரச் சான்று என்பதும் இந்த இடத்தினூடாகவே டச்சுக்காரர் வந்தனர் என்றும், அதன் ஞாபகமாகவே இது அமைக்கப்பட்டது என்றும்,எமது வழிகாட்டி ராஜா தனக்கு தெரிந்ததை எமக்குக் கூறினார்அவரது கூற்றுப்படி இது ஒரு காலத்தில் ஆங்கிலேயருக்கு சீதனமாக வழங்கப்பட்டது என்று கூறினார். மேலே கூறப்பட்ட சரித்திர சான்றுகளின்படி இந்த விடயம் 1661 இல் நடைபெற்றதுபோல் தோன்றுகிறது.




அந்த காலை வேளையில் மங்கலான பொழுதிலும் Gate way of India வின் முகப்புத் தோற்றத்தில் பின்வரும் வாசகர்கள் கல்லில் பொறிக்கப்பட்டிருந்ததை என்னால் குறிப்பெடுக்க முடிந்தது.

"Irrected to commorate the Landing of their Imperial Magistrict King Georg V and Queen Mary on the 2nd of Dec. MCMX1"

### ஹாஜி அலி பள்ளிவாசல் (Hali Ali Mosque)

இப்பள்ளிவாசல் கரையோரப் பாதையிலிருந்து தரை பார்க்கும்போது கடலுக்குள் அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது.உண்மையில் இது கடல் மட்டத்திற்குக் கீழ் உள்ள நிலப்பரப்பில் கட்டப்பட்டிருக்கிறது.கரையிலிருந்து இப் பள்ளிவாசலுக்கு போவதற்கு பாதை அமைக்கப்பட்டிருக்கிறது.


கடல் பெருக்கெடுக்கும் காலங்களில் பள்ளிவாசலின் பெரும்பகுதி கடலுக்குள் அமிழ்ந்து விடுமாம். இதனால் திடீரென ஏற்படும் கடல்பெருக்கு பெரும் காற்று சூறாவளி காலங்களில் உயிராபத்து ஏற்படுவதற்கும் நிறைய சந்தர்ப்பங்கள் உண்டு. அப்படியான சம்பவங்கள் நடைபெற்றுமுள்ளதாம். இப்பள்ளி வாசலை பிற மதத்தவரும் தரிசிப்பது வழக்கமாம்.

இது கடற் பகுதிக்குள் அமைந்திருப்பதாலும் மின் விளக்குகளால் ஒளியூட்டப்படிருப்பதாலும் இரவு வேளைகளில் கப்பல் ஒன்று கடலில் மிதப்பது போன்ற பிரமையைத் தருமாம்.

### சேரி வீடுகள்

நாங்கள் காலை 7.30 மணியளவில் தீவு போன்ற மும்பை நகரத்தை விட்டு வெளியேறி விமான நிலையத்திற்கு வரும் வழியில் ராஜா (வழிகாட்டி) ஒரு சில இடங்களைக் காட்டி மும்பை நகரின் எழிலைக் கூட்டுவதற்காக சேரி ஒழிப்பு நடவடிக்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவதாகவும் அதில் ஓரளவு வெற்றி கண்டபோதும் அதாவது மிகமிக மோசமான சேரி குடியிருப்புக்களுக்கு மாற்றீடாக வசதிகள் செய்து கொடுத்ததன் மூலமாக ஆனால் நடுத்தர வசதிகள் கொண்ட ஏறக்குறைய 500சதுர அடி விஸ்தீரணமும் ஏனைய வசதிகளும் கொண்ட குடியிருப்புக்களை, மாடி வீட்டுத்திட்டங்களின் மூலம் வெற்றிகொள்ளமுடியவில்லை எனவும் கூறினார்.

வரிசையாக அமைந்த தகரத்தினால் வேயப்பட்ட (சில குடிசைகள் அஸ்பெஸ்டா சீற்றினால்) வீடுகளை நான் அவதானித்த போது அவை ஓரளவு வசதியான குடிமனைகளாகவே தோன்றின. இவை நகரில் எல்லைப்புற அல்லது நுளைவாசல் பகுதியை அண்டிய பகுதிகளில் அமைந்திருந்தமையையும் நான் நோக்கினேன்.



ஓரிரு இடங்களில் மிக மோசமான சுற்றுச்சூழல் உள்ள சேரி வீடுகளையும், தெருக்களையும் நகர்ப்புறத்தில் நான் காணக்கூடியதாக இருந்தது .ஆனால் சிவப்பு விளக்கு பகுதி என்ற பகுதிக்கு நான் போனதாகத் தெரியவில்லை. அத்துடன் நான் வழிகாட்டி ராஜாவிம் இதுபற்றி அலட்டிக்கொள்ளவுமில்லை. ❐

**ந.சிவரத்தினம்**
உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கைவங்கி–வடபிராந்திய காரியாலயம்.



# இந்துப் பண்பாட்டின் பெருமையையும் உலகளாவிய மானுட நேசத்தையும் உணர்த்திய மகான்

இந்து சமயத்தின் துறவிகள் வரிசையில் வேந்தராக விளங்கியவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். 1863 ஆம் அண்டு அவதரித்த சுவாமி விவேகானந்தரின் இளமைத் திருநாமம் நரேந்திரன் என்பதாகும்.

இளமையிலேயே ஆளுமையைக் காட்டுகின்ற தோற்றப் பொலிவையும், இயற்கையாகவே தெய்வீகம்சுடர்விடுகின்ற முகப் பொலிவையும் பெற்றவர் இவர். இளமையிலேயே இலக்கிய புலமையும், பல்துறை ஆற்றலும் நிரம்பப்பெற்றவராக விளங்கினார். நரேந்திரனைச் சார்ந்தவர்களும் அவரைச் சந்தித்தவர்களும் கண்டு வியக்கின்ற வகையில் நரேந்திரனின் நினைவாற்றல் அபரிதமாகவிருந்தது.

இளமைப் பருவத்திற்கேற்ப குறும்பும் துடிதுடிப்பும் நரேந்திரனிடம் நிறைந்திருந்தன. இதற்காக அன்னையால் பல தடவை அவர் கண்டிக்கப்பட்டதுமுண்டு. இத்தகைய துடுக்குத்தனம் துளியும் குறையாத ஒரு பொழுதில் தான் இந்தியாவின் தத்துவ ஞானிகளில் ஒருவரும் இந்துமதச் சீர்திருத்த வாதிகளில் முக்கியமானவருமான இராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்தித்தார் நரேந்திரன். இந்தச் சந்திப்பு நரேந்திரரின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இந்தியாவின் பொதுவான பண்பாட்டிற்கும் பெரும் திருப்புமுனையாக அமைந்தது.

இராமகிருஷ்ணரின் தீட்சண்யமான விழிகளுக்கு எதிரே வந்து நின்ற நரேந்திரன் என்கின்ற இளைஞனுக்குள்ளே சுடர் விட்டுக் கொண்டிருந்த ஆத்ம ஜோதி புலப்பட்டது. தாம் தேடிக் கொண்டிருந்த சீடனுக்குரிய இலட்சணங்கள் எதிரே வந்து நின்ற நரேந்திரரிடம் பொருந்தி இருப்பதனை அவதானித்த இராமகிருஷ்ணர் அவரைத் தம் சீடராக ஏற்றுக் கொண்டார். "விவேகானந்தர்" என்கின்ற திருநாமத்துடன் பொது வாழ்க்கையில் பிவேசித்தார் நரேந்திரர்.

இராமகிருஷ்ணரின் மனமறிந்த சீடரான விவேகானந்தர் வாழ்ந்த காலப்பகுதியில் இந்தியச் சமுதாயம் பட்டினியின் பிடியில் சிக்கியிருந்தது. எங்கும் அவலமே ஆதிக்கம் செலுத்தியது. இந்து சமுதாயம் இவ்வாறு இன்னல்படுவதைக் கண்ட விவேகானந்தர் சமுதாயத்தை அவலத்தின் பிடியிலிருந்து மீட்க எண்ணினார். இந்து மதத்தின் தத்துவத்தின் பின்னணியிலேயே தமது பணியை முன்னெடுக்க முனைந்தார். அந்த வகையில் விவேகானந்தரின் சிந்தனைகளில் உலகளாவிய ஒற்றுமையும் உலகளாவிய மானுட நேயமும் உதித்தன. இந்தச் சிந்தனைச் செழுமையைச் சிறப்புற வெளிக்காட்டிய இடமாக சிக்காக்கோ மாநாடு அமைந்தது.

## இன்று சுவாமி விவேகானந்தரின் 147 ஆவது ஜனன தினம்

1893 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வதேச சமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாக கலந்துகொண்ட விவேகானந்தர் "அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே" என்று கம்பீரமாக விளித்தார்.

அந்த இரண்டு சொற்களே ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்த அம்மா பெரும் சபையை விவேகானந்தரின் பால் ஈர்த்தன. "நம் எல்லோரையுமே தம்முடைய சகோதர சகோதரிகளாக காணுகின்ற இந்த கீழைத்தேய துறவி யார்?" என்று சர்வ சமயத்தவரும் மெய்சிலிர்தனர். சில மணித்துளிகளே பேச வேண்டும் என்கின்ற கட்டுப்பாடு அன்று விவேகானந்தருக்கு விலக்கப்பட்டிருந்தது. இதிலிருந்தே விவே கானந்தரின் சொற்பொழிவின் மகத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

விவேகானந்தரின் இந்த சொற்பொழிவு வேதங்களைப் பற்றியதாக இருப்பினும் அதன் சாராம்சம் உலகளாவிய சமய ஒற்றுமையை வலியுறுத்துவதாகவே அமைந்தது. இதனால் தான் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட உலகப் புகழ் பெற்ற பிரான்ஸ் நாட்டின் தத்துவ மேதையான றோமைன் றோலண்ட் என்பவர்

*''சுவாமி விவேகானந்தர் 'உலக சமயங்கள் அனைத்தின் ஒற்றுமைச் சின்னம் "உலகில் உள்ள பலதரப்பட்ட சமயங்கள் கடந்த காலத்தில் இருந்த சமயங்கள் எதிர் காலத்தில் இருக்கப் போகும் சமயங்கள்! ஆகியவற்றின் 'ஒற்றுமைச் சின்னமாக' – சுவாமி விவேகானந்தர் திகழ்கிறார்'' என்று போற்றுவதைக் காணலாம்.*

"புனிதம், தூய்மை, அன்பு, என்பன எல்லாச் சமயங்களினதும் பொதுச் சொத்துக்கள் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, மதநல்லிணக்கம் என்பனவே நமது உலகிற்குத் தேவை'' என்று வலியுறுத்திய விவேகானந்தர் "எழுந்திடு, விழித்திடு, புறப்படு உன் இலட்சியத்தை அடையும் வரை நின்றுவிடாதே'' என்று இளைஞர்களை நோக்கி உற்சாகப்படுத்தினார். ஒருவருடைய கரங்கள் சேவைச் செயலில் தான் அழுக்காக வேண்டும். இதனை விவேகானந்தர் Gospel of Dirty Hands எனக் குறிப்பிட்டார்.

விவேகானந்தர் ஆற்றிய பணிகளில் முதன்மையானது இராமகிருஷ்ண மிஷனை அமைத்தமையாகும். மனித நேயம் இந்து சமயத்தை பரப்புதல், ஏழை எளிய மக்களின் சமூக நல முன்னேற்றத்தைக் கவனித்தல் முதலானவை இராமகிருஷ்ண மிஷனின் செயற்பாடுகளாக அமைந்தன.

ஒரு சமுதாயம் சிறப்புடன் செழித் தோங்க வேண்டுமென்றால், அங்குள்ள பெண்கள் அனைவரும் கல்வி, கேள்வியில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டு மென்று விவேகானந்தரின் கருத்து. இதனால் தான் 1889 ஆம் ஆண்டில் அன்னை சாரதா தேவியின் நினைவு நாள் விழாவின் போது 'நிவேதிதா பெண்கள் பள்ளியை' விவேகானந்தர் தொடக்கி வைத்தார்.

**தே. அஜந்தா**
மானிப்பாய் மகளிர் கல்லூரி

உபநிடதக் கருத்துக்களின் உருவமாகவே வாழ்ந்த சுவாமி விவேகானந்தர் உலகம் எங்கணும் ஆன்மீகப் பயணங்கள் மேற்கொண்டு இந்துப் பண்பாட்டின் பெருமையையும் உலகளாவிய மானுட நேசத்தையும் பரப்பினார்.

1902ல் விவேகானந்தர் இந்த உலக வாழ்க்கையை விடுத்த போதிலும் அவரது மெய்ஞானக் கருத்துக்கள் இந்த விஞ்ஞான உலகில் இன்னமும் கோலோச்சிய படிதான் உள்ளன. இது விவேகானந்தரின் வெற்றி மட்டுமல்ல கீழைத்தேசப் பண்பாட்டின் வெற்றியும் கூடவே.

# கொரிய மொழிப் பரீட்சைகள் இடை நிறுத்தம் மோசடிக்காரர்களிடம் ஏமாறாதீர்கள்

### வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத் தலைவர்

கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு இவ்வருடம் பரீட்சைகள் இடம் பெறமாட்டாது. எனவே இது தொடர்பில் மோசடியாக பணம் சேர்ப்பவர்களிடம் மக்கள் ஏமாற வேண்டாமென்றும் வெளிநாட்டவர்களுக்கு கொரியாவில் வேலை வாய்ப்பு வழங்குவது இடை நிறுத்தப்பட்டதே இதற்கு காரணமென்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, கொரிய நாட்டில் வேலை வாய்ப்புகளை வெளிநாட்டவர்களுக்கு வழங்குவதை அந்நாட்டு அரசாங்கம் பெப்ரவரி மாதம் இறுதிவரை இடை நிறுத்தியுள்ளது.

எனவே வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்து காத்திருக்கும் 8 ஆயிரம் இலங்கையர்களில் நூற்றுக்கு 75 வீதமானோரை கொரிய நாட்டுக்கு வேலை வாய்ப்புக்கு அனுப்பி வைக்கும்வரையிலான காலப் பகுதியில் கொரிய மொழி தேர்ச்சி பரீட்சைகள் நடத்தப்படமாட்டாது.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கமும் கொரிய அரசாங்கமும் உடன்பாடு கண்டுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்கையில் கொரிய நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக பணம் பறிப்பதோடு, கொரிய மொழியை விரைவாக பயில்வதற்கு சிததியை பெற்றுத் தர முடியுமெனக் கூறியும் பணம் பறிக்கும் கும்பல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே இவ்வாறான குழுவினரின் மோசடியில் மக்கள் சிக்கக்கூடாது என தெரிவித்தார். (ஓ-6)

# "அரசியல் சாசன சபை உருவாக்கம்" இறுதி யோசனைகள் ஜனவரி 26 வரை

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

சர்ச்சைக்குரிய அரசியல் சாசன சபை உருவாக்கம் குறித்த யோசனைகளை பிரதம நீதியரசருக்குச் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் சாசன சபையை உருவாக்குவது தொடர்பில் ஜனாதிபதிக்கும், பிரதமர் ரட்ண சிறி விக்ரம நாயக்கவிற்கும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவிற்கும் இடையில் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் இணக்கம் காணப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.

அரசியல் சாசனசபையை நிறுவுவது குறித்த இறுதி யோசனைத் திட்டத்தை ஜனவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அறிவித்திருந்தார். (ஓ-6)

# இலங்கையின் கௌரவம் வெளிநாடுகளில் குறைந்துள்ளது

### ஐ.தே.க. தெரிவிப்பு

இலங்கை தொடர்பாக வெளிநாடுகள் கொண்டிருந்த கௌரவம் தற்போது குறைந்து விட்டதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் காரியாலயம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன். அமரதுங்க இந்த கருத்தை வெளியிட்டார்.

அத்துடன் வெளிநாட்டுக்கு சென்றுள்ள இலங்கையர்கள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்படுகின்றனர் என குறிப்பிட்ட ஜோன் அமரதுங்க நாட்டில் இன்று உள்நாட்டு உற்பத்தியில் பாரிய மீள்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஓ-4)

# அவுஸ்திரேலிய வேலை வாய்ப்புக்கு விண்ணப்பங்கள் குவிகின்றன

அவுஸ்திரேலிய குயீன்ஸ் லான்ட் மாநில அரசாங்கத்தால் உலகளாவிய ரீதியில் விளம்பரம் செய்யப்பட்ட 'சொர்க்கத் தீவில் உலகிலேயே மிகச் சிறந்த தொழில்' வேலை வாய்ப்புக்கு இதுவரை பல இலட்சக்கணக்கானோர் விண்ணப்பித்துள்ளனர்.

ஹமில்டனிலுள்ள 'கிரேட்பரியர் றீவ்' தீவில் 6 மாத காலங்களைக் கழித்து 1 இலட்சத்து 50ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்களை சம்பளமாக பெறுவதுடன் சொகுசு வீடொன்றில்இலவசமாக தங்கவும் வழி வகை செய்யும் மேற்படி தொழிலுக்கு அமெரிக்கா, சீனா உள்ளடங்கலாக 18 நாடுகளில் விளம்பரம் செய்யப்பட்டது.

www.islandreefjob.com என்றமேற்படி வேலை வாய்ப்பு இணையத்தளத்தை புதன் கிழமை மட்டும் மூன்று இலட்சம் பேர் பார்வையிட்டதாக குயீன்ஸ்லாண்ட் மாநில பேச்சாளர் நிகொலிமக் நோட்டன் தெரிவித்தார். மேலும் ஒருமணிநேரத்தில் மட்டும் 25 ஆயிரம் பேர் இந்த இணையத்தளத்தை பார்வையிட முயற்சித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழி லுக்கு எது வித அடிப்படை கல்வித் தகுதியோ தொழில் அனுபவமோ கோரப்படவில்லை. எந்த வயதினரும் இத் தொழிலுக்கு விண்ணப்பிக்கமுடியும்..

சமுத்திரமீன்களுக்கு உணவழித்தல், பொய் கையொன்றைச் சுத்தப்படுத்தல், விமானம் மூலம் வரும் பொதிகளையும் கடிதங்களையும் சேகரித்தல் போன்ற கடமைகளை உள்ளடக்கிய இத் தொழிலுக்கு விண்ணப்பிப்பவர் நீச்சல் அடித்தல், நீரில் மூழ்குதல் படகோட்டம் என்பவற்றில் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் வெற்றிகரமான விண்ணப்பதாரிக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக தங்குவதற்கு 3 படுக்கையறைகளைக் கொண்ட ஆடம்பர இல்லமும் விரும்பிய இடத்திற்கு விரும்பிய நேரத்தில் சென்று வருவதற்கான போக்குவரத்து வசதியும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வேலைக்கு விண்ணப்பிப்பதற் கான இறுதித் திகதி பெப்ரவரி 22ஆகும். (ஓ-6)

# கம்ப்யூட்டர், இன்ரநெற் வர்த்தகத்துக்கு போட்டியாக உருவாகும் எலக்ட்ரோனிக் வர்த்தகம்

(லொஸ் வேகாஸ்)

இன்ரநெற் பார்க்க, இ – மெயில் கையாள, வெப்சைட் தேடுவதற்கெல்லாம் கம்ப்யூட்டரை இனி தட்ட வேண்டாம். லப்டொப்பை தேட வேண்டாம். ரி.வி யைப் போட்டாலே போதும்! ஆம் கம்ப்யூட்டர் இன்ரநெற் வர்த்தகத்துக்கு போட்டியாக எலக்ட்ரானிக் வர்த்தகம் உருவெடுத்து வருகிறது.பாட்டு கேட்பதற்காகவும், நிகழ்ச்சிகள் மற்றும் வீடியோ பார்ப்பதற்காகவும் மட்டும் இருந்து வரும் எலக்ட்ரோனிக் பொருட்கள்எதிர்காலத்தில் இன்ரநெற்வசதியைத் தரும் வகையில் உருவாக்கப்படவுள்ளன.

சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள லொஸ் வேகாஸ் மாநிலத்தில், சர்வதேச எலக்ட்ரோனிக் நிறுவனங்களின் புதிய பொருட்களைக் கொண்ட கண்காட்சி நடந்தது. அமெரிக்க நிறுவனம் ஒன்று வித்தியாசமான கையடக்க தொலைபேசியியை காட்சிக்கு வைத்திருந்தது. இலக்கத்தை சுழற்ற வேண்டாம். பார்த்தாலே போதும்; எதிர்முனையில் உள்ளவருடன் பேச முடியும். அந்த அளவுக்கு தொழில் நுட்ப வசதி இந்த கையடக்க போனில் செய்யப்பட்டிருந்தது.

'போர்ட் எப் 150' டாஷ் போர்ட்டில் உள்ள கம்ப்யூட்டர் திரையில் இன்ரநெற் பார்க்கலாம்; எங்கெங்கு சேவை வசதி உள்ளது என்பதை



உடனுககுடன தொாநதுகொளளலாம. இது போல எல்.ஜி சாம்சங் போன்ற நிறுவனங்கள், வெப்சைட் மூலம் படங்களை டவுண்லோட் செய்து பார்க்கும் வகையில் புதிய ரி.விக்களை உருவாக்க உள்ளன. இன்னும் இரண்டாண்டில், சோனியின் 90 சதவீத ரி.வி.க்களில் இன்ர நெற் வசதி இருக்கும். ரி.வி.யில் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதுடன் இன்ரநெற் பார்க்கவும் வசதி செய்யப்படும் என்று அதன் செயல் தலைவர் ஹேவார்ட் ஸ்ட்ரிங்கர் கூறியுள்ளார்.இப்போதே முப்பரிமாண ரி.வி.க்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. அதுபோல, உலகின் விற்பனையில் மூன்றாவது இடத்தில் உள்ள நொக்கியா, மியூசிக் மட்டுமல்லாமல் ஏகப்பட்ட வசதிகளுடன் உருவாக்க தயாராகி விட்டது. (ஓ-6)

# ஆண்களில் பணம் சம்பாதிக்கும் ஆற்றல் கைவிரல்களின் நீளங்களால் நிர்ணயம்

## பிரித்தானிய விஞ்ஞானிகள்



ஆண் ஒருவரின் பணம் சம்பாதிக்கும் ஆற்றல் அவரது கைவிரல்களின் நீளங்களில் தங்கியிருப்பதாக பிரித்தானிய விஞ்ஞான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுட்டு விரலை விட மோதிர விரல் நீளமாக உள்ளவர்கள் அதிகளவு பணத்தைச் சம்பாதிப்பது தமது அண்மைய ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மேற்படி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சுட்டு விரலினதும் மோதிர விரலினதும் நீளங்கள் குழந்தையொன்று உருவாகும் சமயத்தில் கருப்பையில் வெளியிடப்படும் ரெஸ்ரொஸ்டரோன் ஓமோனின் அளவால் நிர்ணயிக்கப்படுவதாக தெரிவிக்கும் விஞ்ஞானிகள், சுட்டு விரலை விட மோதிர விரல் நீளமாகவுள்ளவர்கள் துரிதமாக முடிவெடுக்கும் ஆற்றலைக் கொண்டு விளங்குவதால் வாணிப போட்டிகளை இலகுவில் சமாளித்து அதிக வருமானத்தை ஈட்டுவதாக குறிப் பிட்டனர்.

மேலும் மேற்படி மோதிர விரல் நீளமானவர்கள் ஆக்கிரமிப்பு மற்றும் வன்முறை எண்ணங் கொண்டவர்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வருடத்திற்கு 4 மில்லியன் ஸ்ரேலிங் பவுனுக்கு அதிகமான வருமானத்தை ஈட்டும் லண்டனில் வாழும் 44 வர்த்தகர்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.இதன் போது சுட்டு விரலை விட மோதிர விரல் நீளமானவர்கள், மற்றவர்களை விட 11 மடங்கு அதிகமான பணத்தை சம்பாதிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் பல வருட தொழில் அனுபவத்தால் கிடைக்கக் கூடிய வெற்றிக்கு சமமான பங்களிப்பை ஒருவரது உயிரியல் ரீதியான கூறுகள் வழங்குவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (ஓ-6)

# "மனித உரிமைகளுக்கு இடமளிக்க வேண்டும்"

# ஒபாமாவுக்கு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமா அமெரிக்க வெளிநாட்டு, உள்நாட்டு மற்றும் பாதுகாப்பு கொள்கைக்கு மத்தியில் மனித உரிமைகளுக்கும் இடமளிக்க வேண்டும் என அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதி புஷ்ஷின் நிர்வாகத்தால் ஏற்பட்ட பாரிய இழைப்பை ஒபாமா களைய வேண்டும் என மேற்படி கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.மனித உரிமைகள் கண்காணிப்பகமானது கடந்த ஆண்டிலான சர்வதேச சிவில் சுதந்திரத்தை மதிப்பீடு செய்யும் வகையில் 564 பக்க அறிக்கையொன்றை புதன்கிழமை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த அறிக்கையில் இலங்கை, ஆப்கானிஸ்தான், ஜோர்ஜியா, இஸ்ரேல், பலஸ்தீன பிராந்தியம் என்பன உள்ளடங்கலாக உலகமெங்கும் இடம்பெற்றுவரும் மோதல்களால் பொதுமக்கள் துன்பப்படுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது 90 நாடுகளின் நிலைமைகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளின் போது இடம்பெற்ற துஷ்பிரயோகங்களுக்காக பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைக் குற்றஞ்சாட்டியுள்ளது. மேற்படி கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கென்னத் ரொத் விபரிக்கையில்,அமெரிக்காவின் கௌரவத்தை மீள நிலைநாட்டுவது ஒபாமாவின் அரசாங்கத்தின் மிகப் பெரிய தேவையாக உள்ளது என்றும் கூறினார். புஷ்ஷின் நிர்வாகத்தால் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட பாரிய சீர்குலைவை சீர்செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு ஒபாமாவுக்கு உள்ளதாக குறிப்பிட்ட அவர் எமது மதிப்பீட்டின் பிரகாரம் அமெரிக்காவின் கௌரவத்தை மீளப்பெற இருவிடயங்களை ஒபாமா செய்யவேண்டியுள்ளது.

முதலாவது புஷ் சகாப்த துஷ்பிரயோகங்களை முடிவுக்குக் கொண்டு வருவது, இரண்டாவது அத்துஷ்பிரயோகங்களை உத்தியோகபூர்வமாகவும் முடிவாகவும் நிராகரிப்பது ஆகும் என்று கென்னத் ரொத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக போராட தீர்மானித்ததன் பிற்பாடு புஷ்ஷின் நிர்வாகம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலிருந்து பெருமளவு தவறியுள்ளதாக குற்றஞ் சாட்டியுள்ள மனித உரிமைகள் காண்காணிப்பகம் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து மீள சிந்திப்பது பராக் ஒபாமாவுக்கும் அவரது குழுவினருக்கும் மிக முக்கியமான முதலாவது முன்னடியெடுத்து வைப்பாகவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)



அமெரிக்காவின் ஹட்சன் நதியில் விபத்துக்குள்ளான ஏர்பஸ் 320 விமானத்தை மீட்புக் குழுவினர் மீட்கின்றனர்

# பொருளாதார மீட்சிக்கு புதிய அதிபர் ஒபாமா என்ன செய்யப் போகிறார்?



அமெரிக்க அதிபராக இம் மாதம் 20ஆம் திகதி பதவியேற்கவிருக்கும் பராக் ஒபாமா அந் நாட்டுப் பொருளாதார மீட்சிக்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார் என்று உலகமே பார்த்துக் கொண்டிருக்கிறது.

உலகப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு மூல காரணம் அமெரிக்காவின் பங்குச் சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சிதான் என்பதால் , அங்கு எடுக்கப்படும் எதிர் நடவடிக்கைகளால் தான் தங்களாலும் மீட்சிபெற முடியும் என்று அதைச் சார்ந்த நாடுகள் நினைக்கின்றன.

2001 ஆம் ஆண்டு ஜோர்ஜ் புஷ் அமெரிக்க அதிபராகப் பதவியேற்றபோது அந்த அளவுக்குத் தீவிரமாக இல்லை என்றாலும் இதேபோன்ற பொருளாதாரச் சூழல் தான் நிலவியது. அரசின் செலவுகளை அவர் பல மடங்காக அதிகரித்ததும் வரிச் சலுகைகளை அளித்ததும் அந்த நேரத்தில் பொருளாதாரம் மீட்சிபெறப் போதுமானதாக இருந்தது.

ஒபாமா பதவிக்கு வந்தவுடனேயே 5 இலட்சம் கோடி ரூபாயை அரசின் கருவூலத்திலிருந்து எடுத்து செலவிட அனுமதிப்பார் என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தொகை நமக்கு மிகப் பெரிய பிரமிப்பாக இருந்தாலும் அந் நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் இந்தத் தொகை போதாது குறைந்தபட்சம் 25லட்சம்கோடி ரூபாயிலிருந்து 30 இலட்சம் கோடி ரூபாய் வரையிலாவது செலவழித்தால் தான் ஓரளவுக்கு மீட்சி பெறமுடியும் என்று தெரிவிக்கின்றனர். அந்த அளவுக்கு அங்கு பொருளாதார நடவடிக்கைகள் செயலிழந்துவிட்டன.

அதுமட்டும் அன்றி வரிச் சலுகைகளையும் அளிக்க வேண்டும் என்று கோருகின்றனர். அந்தச் சலுகைகள் ஓராண்டு,ஈராண்டு என்று இல்லாமல் நிரந்தரமான வகையில் இருக்கவேண்டும். சுருங்கச் சொன்னால் வரிச்சீர்திருத்தம் அவசியம் என்று வலியுறுத்துகின்றனர்.உயர் வருவாய்ப் பிரிவினருக்கும் அதிக வரி விதிப்பும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்குச் சலுகைகளும் அவசியம் என்று அவர்கள் கோருகின்றனர்.

வருவாயைச் செலவிடுவது குறித்தே பேசிவந்த அமெரிக்கப் பொருளாதார நிபுணர்களில் சிலர் முதல் முறையான, தனி நபர் சேமிப்புக்கும் இடம் தரவேண்டும் என்று பேச ஆரம்பித்துள்ளனர். அதற்கேற்ப வரிச் சலுகைகளும் முதலீட்டுச் சலுகைகளும் அவசியம் என்று கருதுகின்றனர்.

அமெரிக்காவைப் பார்த்து கடன் அட்டை கலாசாரத்தில் நாம் மூழ்கிக் கொண்டிருக்கும் நிலையில்,நம்மைப் போன்ற கீழ்த்திசை நாடுகளின் நல்ல பொருளாதார பழக்க வழக்கங்களை அமெரிக்காவும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கத் தொடங்கியுள்ளனர்.தனி நபரின் சேமிப்பால் என்ன ஆகிவிடப் போகிறது என்று இதுநாள் வரை கருதியது சரியல்ல என்று முதல்முறையாக அவர்களில் பலர் உணர்ந்துள்ளனர்.

அமெரிக்காவில் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களுக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்பவை மருத்துவச் செலவுகள் தான். மருத்துவத்துறை பெரும்பாலும் தனியார் வசமிருப்பதால் மருத்துவச் செலவுகளுக்காகவே காப்புறுதி நிறுவனங்களை நாடுவது அங்கு கட்டாய கடமையாகிவிட்டது.அப்படிப்பட்ட நிறுவனங்கள் தான் வீட்டுக் கடன் உள்ளிட்ட பல திட்டங்களுக்கு வரம்பில்லாமல் கொடுத்து நஷ்டமடைந்து அமெரிக்காவையே நிலைகுலையச் செய்துவிட்டன.

எனவே மக்களுக்குத் தேவையான மருத்துவக் காப்புறுதி பாதுகாப்பை புதிய திட்டங்கள் மூலம் அரசே நிர்வகிக்க வேண்டும் என்ற கருத்தும் வலுத்துவருகிறது.

ஓய்வுபெறும் வயதை எட்டுபவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் அடுத்த ஆண்டு முதல் கணிசமாக உயர்கிறது. அப்படி ஓய்வு பெறுபவர்களின் சமூகப் பாதுகாப்புக்காக (ஓய்வூதியத் திட்டங்கள்) அரசு அதிகம் செலவிட வேண்டும். எனவே அதற்கும் சேர்த்து ஒபாமா நிதி ஒதுக்கவேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் இப்போதே கூற ஆரம்பித்துவிட்டனர்.


அமெரிக்காவில் கடந்த 16 ஆண்டுகளில் இருந்திராத வகையில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது. நாட்டு மக்கள் தொகையில் மொத்தம் 7.5% பேர் வேலை தேடிப் பதிவு செய்துள்ளனர். இவர்களைத் தவிர கணிசமானவர்கள் பகுதிநேர வேலை வாய்ப்பை மட்டுமே பெற்றுள்ளனர். அவர்களுக்கு மேலும் பல மணி நேரங்களுக்கு வேலையும் கூடுதல் ஊதியமும் தேவைப்படுகிறது என்பது சொல்லாமலே புரியும்.

அயல்பணி ஒப்படைப்பு மூலம் இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளில் வேலைகளைச் செய்துகொள்வதால் அமெரிக்காவில் கணிசமான அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும்,ஊதிய இழப்பும் ஏற்பட்டுள்ளது என்று கடந்த ஓராண்டாகவே உரத்து முழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒபாமா என்ன செய்வார், என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

நன்றி:தினமணி

# பாகிஸ்தானைப் போல் இலங்கையுடனும் துடுப்பாட்டத்தை தவிர்க்க வேண்டும்

## இராமதாஸ் வேண்டுகோள்



பாகிஸ்தானுடன் துடுப்பாட்டம் விளையாடுவதனை தவிர்த்தது போன்று இலங்கையுடனும் தவிர்க்க வேண்டும் என்று இந்திய துடுப்பாட்ட சபையிடம் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மருத்துவர் இராமதாஸ் கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உலகில் மனிதப் படுகொலைகளை நடத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது.

சொந்த நாட்டு மக்களைக் கொன்று குவித்து வரும் இலங்கையின் போர் வெறிக்கு அதன் தமிழ் இன விரோத வெறி தான் காரணம். இலங்கையில் இந்த இன வெறிக்கு எதிராக உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்தியாவில் வாழ்கின்ற 7 கோடி தமிழர்களும் இவர்களோடு சேர்ந்து மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் இனவெறியை வன்மையாகக் கண்டித்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் இந்திய துடுப்பாட்ட அணியினர் இலங்கைக்குச் சென்று 5 ஒருநாள் போட்டிகளிலும், வேறு சில போட்டி களிலும் விளையாட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் துடுப்பாட்ட சபையின் தலைவராக இருப்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இந்திய அணிக்கு வீரர்களைத் தேர்வு செய்யும் தேர்வுக் குழுவுக்கு தலைவராக இருப்பவரும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இருவர் இடம் வகிக்கின்ற இந்த சமயத்தில் தமிழினப் படுகொலையை நடத்திக் கொண்டிருக்கும் இலங்கைக்கு இந்தியத் துடுப்பாட்ட அணியை அனுப்புவது என்று முடிவு எடுத்ததற்கு எப்படி இணக்கம் தெரிவித்தார்கள்? என்று புரியவில்லை. இது தமிழர்களிடையே வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.

விளையாட்டுக்களில் அரசியல் பிரச்சினைகளைப் புகுத்தக்கூடாது என்று சிலர் கூறலாம். ஆனால், அது ஒரு சார்பாக இருக்கக்கூடாது. அண்மையில் பயங்கரவாதிகள் சிலர் மும்பாய் நகருக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள் என்பதற்காக, இந்தியத் துடுப்பாட்ட அணியின் பாகிஸ்தான் பயணம் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்து வரும் இலங்கைப் படையினரின் நடவடிக்கைகளும் ஒரு வகையில் பயங்கரவாதச் செயல்தான்.

தென்னாபிரிக்காவின் இனவெறியைக் கண்டிக்கும் வகையில் இந்தியாவும் முன்பு தென்னாபிரிக்காவுடன் எத்தகைய விளையாட்டு உறவுகளையும் வைத்துக்கொண்டதில்லை. அந்த வழிமுறையைப் பின்பற்றி இப்போது, இலங்கை அரசாங்கத்தின் பயங்கரவாதம் மற்றும் அதன் இனவெறியைக் கண்டிக்கும் வகையில், இலங்கையுடன் கிரிக்கெற் விளையாடுவதை இந்தியா தவிர்க்க வேண்டும்.

இலங்கையில் சண்டை நிறுத்தப்பட்டு தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காணப்பட்டு, இனவெறிக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வராத நிலையில் இந்தியத் துடுப்பாட்ட அணியை இலங்கைக்கு அனுப்பமாட்டோம் என்ற முடிவினை துடுப்பாட்ட சபை எடுக்க வேண்டும்.

அதற்கு இந்திய அரசும் உத்தரவிட வேண்டும். இல்லை என்றால் எதிர்வரும் காலங்களில் சென்னையில் நடைபெறும் அனைத்துலக துடுப்பாட்ட போட்டிகளை தமிழர்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கும் நிலை வரலாம். அத்தகைய நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியத் துடுப்பாட்ட சபையும் இந்திய அரசாங்கமும் நல்ல முடிவெடுத்து அறிவிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# ஈழத்தமிழர் நலனுக்காக தாங்கள் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டம் மெய்சிலிர்க்க வைக்கிறது

## திருமாவளவனுக்கு சுவிஸ் தமிழர் பேரவை கடிதம்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் மேற்கொள்ளவுள்ள சத்தியப் போராட்டம் வெற்றிபெற சுவிஸ் தமிழர் பேரவை வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் உள்ள சேப்பாக்கம் விருந்தினர் மாளிகைக்கு எதிரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொல். திருமாவளவன் உண்ணாநிலைப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளார்.

இப்போராட்டம் வெற்றிபெறவேண்டும் என வாழ்த்தி சுவிற்சர்லாந்து பேர்ணை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சுவிஸ் தமிழர் பேரவையின் தலைவர் சண். தவராஜா, செயலாளர் தம்பிப்பிள்ளை நமசிவாயம் ஆகியோர் இணைந்து கையொப்பமிட்டு தொல். திருமாவளவனுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஈழத்தமிழர் நல்வாழ்வுக்காக, அவர்களின் உயிர்கள் அழிவில் இருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக தாங்கள் மேற்கொண்டுள்ள உண்ணாநிலைப் போராட்டம் எங்களை மெய்சிலிர்க்கச் செய்கிறது.

காலத்தால் செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலும் ஞாலத்தில் என்றென்றும் நினைவு கூரப்படவே செய்யும். அந்த வகையில், சாவின் விளிம்பில் நிற்கும் எமது உறவுகளின் உயிர் காக்க தாங்கள் புரிந்து வரும் தியாகத்தை சுவிஸ் தமிழர் பேரவை மதித்து நிற்கிறது.

இன்று அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருப்பது தனியே ஈழ தேசிய விடுதலைப் போராட்டம் மட்டும் அன்று. மாறாக, உலகம் எங்கும் பரந்து வாழும் எட்டுக் கோடித் தமிழர்களினதும் மானமும் மரியாதையும் தான். இன்றைய தருணத்தில் உலகத் தமிழினம் ஒன்று பட்டால் ஒழிய வன்னியில் அழிவின் விளிம்பில் இருக்கும் தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் காக்க முடியாது. இந்திய மண்ணில் இருந்து கொண்டு ஈழத் தமிழ் மக்களுக்காய் குரல் கொடுப்பதும் ஒன்று இலகுவான விடயமல்ல. மாறாக , துணிச்சலும், தியாகமும் நிறைந்த ஒரு விடயம்.

ஈழத் தமிழர் விடயத்தில் தங்களின் துணிச்சலையும், அன்பையும் பல தடவைகளில் கடந்த காலங்களில் நீங்கள் நிரூபித்திருக்கின்றீர்கள். கொண்ட கொள்கையில் பிடிப்பும் , அதனைச் செய்து முடிப்பதற்கான அர்ப்பணிப்பும், நேர்மையும் கொண்டவர்களால் மாத்திரமே இத்த கைய பணியைச் செய்ய முடியும். அந்த வகையில் , எமக்காக நீங்கள் தொடங்கியுள்ள சத்தியப் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என சுவிஸ் தமிழர் பேரவை வாழ்த்துகின்றது. உலகத் தமிழினமே எண்ணிப்பார்! -நீ உறங்கினால் யார் உன்னை மன்னிப்பார்? என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

4-II

### அசேதனப் பசளைகளில் தங்கியிருந்த. விவசாயம்



அதிகரித்த விளைச்சல் ஒன்று மட்டுமே குறிக்கோளாக இருந்தது. அதிகளவில் அசேதனப்பசளைகளை உள்வாங்க ஊக்குவித்து விட்டது. ஒருபக்கம் உண்ண உணவில்லை என்ற கூக்குரல்கள். இன்னொரு பக்கம் எப்படியாவது உணவுற்பத்தியை பல மடங்காக அதிகரிக்க வேண்டுமென்ற விஞ்ஞானத்தின் அங்கலாய்ப்பு.

பல வழிகளில் விஞ்ஞானத்தின் சில்லுகளைத் தட்டிவிட்டு விளைச்சலை அதிகரிக்கும் ஆய்வுகள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டது. புதிய திருந்திய இனங்கள் புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன. புதிய திருந்திய இனங்களால் மண்ணில் இருந்த சத்துக்களை அகத்துறிஞ்சி சிறப்பாக வளர முடியவில்லை.

மண்ணிலிருந்ததை விட மேலதிகமாக அவற்றின் வளர்ச்சி வேகத்திற்கேற்ப தேவைப்பட்டன. அதனால் அசேதன இரசாயனத்தின் பயன்பாடு அதிகரித்தது.

### சூழலையும் மண்ணையும் மறந்த விவசாயம்

விரைந்த வளர்ச்சியும் அதிகரித்த விளைச்சலும் மட்டுமே குறிக்கோள்களாயிருந்ததனால் விதம் விதமான உள்ளீடுகளுக்கு இயைந்து கொடுக்கக் கூடிய பயிரினங்களை விஞ்ஞானம் உருவாக்கிக் கொடுத்தது. ஆக உள்ளீடுகளும் விளைச்சலும் மட்டுமே எங்கும் பேச்சாக இருந்ததேயொழிய மண்ணைப் பற்றியோ, நாம் வாழும் சூழலைப்பற்றியோ எந்தவிதமான கரிசனையும் காட்டப்படவில்லை. மண்ணிற்குத் தேவையான மண்ணை ஈர்ப்புடன் வைத்திருக்க வேண்டிய எந்தவிதமான முன்னெடுப்பும் எடுக்கப்படவில்லை.

முதலாவது பசுமைப்புரட்சி சூழலையும் மண்ணையும் மறந்தேவிட்டது. அதுவே முதல் தவறாகிவிட்டது.

மண்ணின் வளத்தை மேம்படுத்தும் செயல்களில் பசுமைப்புரட்சியை நெறிப்படுத்தியி




ருந்தால் நாம் பயிர்ச்செய்கையில் படும் இவ்வளவு அவலமும் ஏற்பட்டிருக்காது. விளை நிலத்தில் உள்ள மண்ணின் உயிர்ப்புத் தன்மையை ஏற்படுத்த அதிலுள்ள நன்மைதரும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இவ்வாறான நுண்ணங்கிகளின் ஆதிக்கத்தை அதிகரிக்க அவை வாழுகின்ற மண்ணில் அவற்றிற்கான சேதன சேர்வைகளின் கிடைத்தன்மையை அதிகரிக்க வேண்டும்.

### மண்ணும் சேதனப்பசளைகளும்

விளைநிலத்திற்கு தேவையான மட்கு- அதிகமாக இருந்தால் பயிரின் வளர்ச்சி மேம்படும். மண்ணிற்குத் தேவையானளவு சேதனப் பொருட்களை பசளைகளாகவோ அல்லது ஆதாரப் பொருட்களாக இடும் போது நன்மை தருகின்ற நுண்ணங்கிகள் இவற்றில் பல்கிப் பெருக ஏதுவாக அமையும். அத்துடன் , மண்ணினுள் வளமான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் . மண்ணினுள்ள வாயுப் பரிமாற்றத்திற்கும் நன்மை தரும் நுண்ணங்கிகளின் இயல்பான பெருக்கத்திற்கும் சேதனப் பசளைகள் பெரிதும் உதவுகின்றன.

### மண்ணின் தன்மையும் சேதனப் பொருட்களும்

மண்ணின் தன்மைக்கேற்ப சேதனப் பொருட்கள் இடுவதன் அளவை நிர்ணயிக்கலாம். களி மண் தரையாக இருப்பின் சேதனப் பசளைகள் மண்ணை இறுக்கமல்லாது வேர் இலகுவாக பல்கிப் பெருக உதவும் .அது போல மணல் துறை என்னும் போதும் அதிலுள்ள ஊட்டச் சத்து மிக மிகக் குறைவதனால் சேதனப் பொருட்களின் சேர்க்கை மண் வளமாக பெரிதும் பயன்படும். மண்ணின் வெப்பநிலை, ஈரப்பதன் மற்றும் கார அமிலத் தன்மை என்பன கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

களி மண் தரையில் சேதனப் பசளைகளை அதிகளவில் இடக்கூடாது .அதுவும் உக்காத சேதனப் பொருட்களை இடக்கூடாது. களி மண் நிலத்தில் நீர்பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிகமாக இருப்பதனால் அதிகளவில் உக்காத சேதனப் பொருளை இடும் போது காற்றின்றிய சுவாசம் நிகழக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும்.

இதன்போது நன்மை தரக் கூடிய , காற்றுச் சுவாசம் மூலம் இனம் பெருக்கும் நன்மை தரும் நுண்ணங்கிகள் அழிவுற்று விடும். கிட்டத்தட்ட நீர்கூடி 'சேறு' போன்றதொரு நிலைமை ஏற்படும்போது வேர்களுக்குத் தேவையான சுவாசம் கிடைக் காமையினால் வேர் மயிர்கள் அழுகத் தொடங்கி பின் வேரையே அழுக வைத்து விடும். இதுபோன்றதொரு நிகழ்வு தான் சென்ற ஆண்டின் நடுப்பகுதியில் சுன்னாகத் திலுள்ள கத்தரித் தோட்டங்களில் நிகழ்ந்தது. பயிர்கள் அனைத்தினதும் வேர்கள் அழுகத் தொடங்கியதால் கழுத்துப் பகுதியில் பூஞ்சண அழுகல் நோய் ஏற்பட்டது. அழுகல் கண்ட அனைத்துக் கத்தரிச் செடிகளும் வாடி விட்டன. இப்படிப் பல நோய் தொற்று பயிர் களை அறுவடைசெய்யும் போது நடை பெற்று முடிந்துவிட்டன. இம் மாதிரி வரும் 'நோய்களை உடன் கட்டுப்படுத்த முடியாதிருப்பதனால் இழப்பு அதிகமாகவே இருக்கும். பெரியோர்கள் கூறியதுபோல 'வருமுன் காப்பதே' சிறந்த வழி.

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### சேதனப் பசளைகளாக பசுந்தாள் பசளைகள்

அசேதனப் பசளைகளுக்கான மாற்றீடு ஆக பசுந்தாள் பசளைகளும் பசுந்தாள் இலைப் பசளைகளும் பயன்படுகின்றன. எங்களூர் விவசாயிகளுக்கு இவற்றின் முக்கியத்துவம் தெரிந்தும் தெரியாத நிலையில் வெறுமனே அசேதனப் பசளைகளை மட்டுமே நம்பியிருந்த நிலையிலிருந்து மீள வேண்டிய காலம் கனிந்திருக்கிறது. பசுந்தாள் பசளைகளின் சேர்க்கை மண்ணுக்கு அதன் தன்மையை மேம்படுத்த உதவும். சூழல் மாசடைவதையும் குறைக்கும். (தொடரும்)

எதுவும் தானாக வருவதில்லை; நல்லது எதுவும் நிச்சியமாக வருவதில்லை. எல்லாவற்றையும் நாமே கொண்டுவரவேண்டும்.

– பாலி

## இடைத்தங்கல் முகாம் மக்களின் நலன்கள் பேணப்பட வேண்டும்

வன்னிப் பெருநிலப்பரப்பில் ஏற்பட்ட யுத்தத்தினால் அப்பாவிப் பொதுமக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

மனித வாழ்க்கை வேண்டாம் என்று எண்ணும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

எங்கும் மரண ஓலம் இன்று யார் யார்? என்று கேட்கும் அளவில் தினந்தோறும் மனித உயிரழிவுகள் நடந்தவண்ணமுள்ளன.

இப்படியொரு துயரத்தை அப்பாவி தமிழ் மக்கள் அனுபவிக்கும் நிலையில், அவர்களுக்காக இறைவனை வழிபடுவதைத் தவிர வேறு எதனை நாம் செய்ய முடியும்?

எங்களின் உறவுகளின் துயரத்தை நீக்க இறைவா! உதவி செய் என்ற வேண்டுதலோடு வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் நலன் பாதுகாப்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படுவது கட்டாயமானதாகிறது.

குறிப்பாக வன்னிப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வவுனியா மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தங்கியுள்ள மக்களின் நலன் கவனிக்கப்படுவதில் அதீத கவனம் செலுத்தவேண்டும்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தங்கியுள்ளவர்கள் தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் தத்தம் உறவினர்களுடன் கலந்துரையாடுவதற்குமான வசதியைச் செய்து கொடுப்பது மனித நேயத்தின் அடிப்படையாகும்.

அதேநேரம் வன்னிப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த மக்களின் பாதுகாப்பு விடயத்தில் படைத்தரப்பினருக்கு முக்கிய பொறுப்புண்டு.

1995ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் யாழ்ப்பாணத்திற்கு மீளத் திரும்பினர்.

எனினும் மீளத் திரும்பியதற்குப் பின்னர் நிகழ்ந்த துயரமான சம்பவங்கள் இன்றும் ஆழ் மனதில் உறைந்துபோயுள்ளது.

இத்தகையதோர் அவலத்தை இனிவரும் காலங்களில் மக்கள் அனுபவிக்கக் கூடாது. அப்படியொரு நிலையை தாங்கிக் கொள்வது எவராலுமே முடியாத காரியம்.

எனவே இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட்டு மனித அவலம் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

உலக நாடுகள் தமிழ் மக்களுக்குச் செய்த பெருந் துரோகத்தின் கொப்பளங்கள் மாறுவதற்கு பல காலம் செல்லலாம்.

ஆனாலும் அமைதி, சமாதானம் என்ற முணுமுணுப்போடு இருக்கும் அரசு, தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் அநீதி இழைக்குமாயின் அதனை இறைவன் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டான்.

# அடக்கு முறைகளை இல்லாதொழிக்க ஜனநாயக சக்தியை கட்டியெழுப்ப வேண்டும்

## மூன்று மாத வேலைத்திட்டம் ஆரம்பித்துள்ளதாக ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக அடக்குமுறைகள், மனிதப்படுகொலைகள் மற்றும் ஊடக ஒடுக்குமுறை, கலாசாரம் என நாடு பாதாளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இவற்றை இல்லாதொழிக்க வேண்டுமானால் மக்கள் பலம் பொருந்திய ஜனநாயக சக்தியொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இதற்கான மூன்றுமாத வேலைத்திட்டத்தை ஐ.தே.க. ஆரம்பித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். ஐக்கியத் தேசியக் கட்சியின் பலம் குன்றிவிடவில்லை. ஆனாலும், அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க ஒன்று திரண்ட பலம் தேவை. அதனை உறுதிப்படுத்தும் வகையில் சகலரும் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டு ஜனநாயகத்தை ஆதரிக்குமாறு நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு கேம்பிரிஜ் ரெரசில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுவதாவது :-

அடக்கு முறைகளுக்கு எதிரான சக்தியின் தன்மை பாரியதாக இருக்க வேண்டும். அப்போது அதனை ஒடுக்க முடியும் இன்று நாட்டில் எங்கு பார்த்தாலும் அடக்கு முறைகள், ஊடக கலாசாரத்திற்கு பங்கம், படுகொலைகள், அடிப்படை மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவையே தலைவிரித்தாடுகின்றன. இதுவே நாட்டை அதல பாதாளத்திற்குள் தள்ளிக் கொண்டிருக்கின்றது.

தனி மனித சுதந்திரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இவையனைத்தும் இல்லாதொழிக்கப்படும் போதே ஜனநாயகம் மலர முடியும். அந்த ஜனநாயகத்தை மலரச் செய்ய வேண்டுமெனில் அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் எதிரான ஜனநாயக வாதத்தின் சக்தி மிகவும் பலமுடையதாக இருக்க வேண்டும்.

அவ்வாறனதொரு மக்கள் சக்தியை அதிகரித்துக் கொள்வதன் மூலமே எதனையும் சாதிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் குன்றிவிடவில்லை. மாறாக அதன் பலம் பலமடங்காக அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

அடக்கு முறைக் கலாசாரத்தை வேரறுக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி மூன்று மாத வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது. எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் கட்சியின் உறுப்புரிமையை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன.

நாட்டில் ஜனநாயகம் நிலைக்க வேண்டும் என்று விரும்புகின்ற ஜனநாயக விரும்பிகள் சகலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதனை நிறைவேற்ற கட்சித் தலைமையகம் மற்றும் அமைப்பாளர்கள் தயார் நிலையில் இருப்பதையும் இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை பலமடையச் செய்ய முடியும் என்பதோடு நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் படுகொலைகள், ஊடக அடக்கு முறைகள் போன்ற சகலவித ஜனநாயக விரோதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு உந்து சக்தி கிடைக்கும்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை உறுதிப்படுத்தி ஜனநாயக சக்தியை பலப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும். (ஓ-6)

# இலங்கை மீதான தடைகள் விதிப்பது குறித்து அவுஸ்திரேலியா ஆலோசிக்க வேண்டும்

## தமிழர் அமைப்பு வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை மீதான தடைகளை விதிப்பது குறித்து அவுஸ்திரேலியா ஆலோசிக்க வேண்டுமென்று அவுஸ்திரேலியாவிலுள்ள தமிழர் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கன்பராவைத் தளமாகக் கொண்டியங்கும் தமிழர் அமைப்பின் தலைவர் சிற்றம்பலம் இராகவன் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித்திடம் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையைத் தொடர்ந்தே சிற்றம்பலம் இராகவன் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு கவலை தெரிவித்துள்ள ஸ்ரீபன் ஸ்மித் இலங்கையில் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் ஊடகங்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

அத்துடன் லசந்த விக்கிரமதுங்கவின் குடும்பத்தினருக்கு அவுஸ்திரேலிய அரசின் சார்பில் ஸ்மித் அனுதாபங்களையும் தெரிவித்தார். (ஓ-6)

# கட்டாரில் உள்ள இலங்கையருக்கு

## அரபு மொழிப் பயிற்சி

## வெளிவிவகார அமைச்சு தகவல்

கட்டார் நாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு அரபு மொழிப் பயிற்சிகளை வழங்க அந்நாட்டு அரசாங்கம் இணங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரி வித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ளஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம அண்மையில் கட்டாருக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அந்நாட்டின் முக்கிய அமைச்சர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கட்டார் இஸ்லாமிய விவகார அமைச்சர் அஹமட் பின் அப்துல்லாஹ் அல்மரியுடன் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் போது அமைச்சர் போகொல்லாகம இதற்கான வேண்டுகோளை விடுத்திருந்தார்.

பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்ற சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இலங்கையர்கள் கட்டாரின் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி புரிகின்றனர். இன்னும் பலர் வேலைவாய்ப்புக்காக கட்டார் வருவதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

கட்டாரில் தொழில் புரியும் இலங்கையர்கள் அனைவரும் சுயமான முறையில் தொடர்பாடல் வசதிகளை மேற்கொள்வதற்கு அரபு மொழி அவசியமாகும். இனிவரும் காலங்களில் கட்டாருக்கு வருகை தரவுள்ள இலங்கையர்களின் நன்மை கருதி அரபு மொழிக்கான பயிற்சிகளை வழங்க தமது அரசாங்கம் முன்வர வேண்டுமெனவும் அமைச்சர் போகொல் லாகம கட்டார் அமைச்சர் அப்துல்லாஹ்விடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அமைச்சர் போகொல்லாகமவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் அப்துல்லாஹ், அதனை அமுல்படுத்துவது தொடர்பாக ஆராய்வதாகக் குறிப்பிட்டார். (ஓ-6)

# கொழும்பில் இடம் பெற்ற தேடுதலில் 13 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் 13 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தை பம்பலப்பிட்டி, மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களிலேயே தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன. விசேட அதிரப்படையினர் நடத்திய தேடுதலில் கைதுசெய்யப்பட்ட 13 இளைஞர்களும் அந்தந்த பகுதி பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது வீதியில் நடந்து சென்றவர்களும் வாகனங்களில் சென்றவர்களும் வழிமறிக்கப்பட்டு கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

# தன்னம்பிக்கை



உலக வரலாறு என்பது தன்னம்பிக்கை உடைய சிலரின் வரலாறே. அத்தகைய தன்னம்பிக்கை நம்முள் இருக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துகிறது. நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். எல்லையற்ற ஆற்றல் வெளிப்படும் அளவுக்கு நீங்கள் முயலாத போதுதான் தோல்வி அடைகிறீர்கள். தன்னம்பிக்கையை இழக்கின்ற அந்தக் கணமே ஒருவன் அழிகிறான் ; ஒரு நாடும் அவ்வாறே.

# இலங்கைத் தமிழருக்கு உதவி வழங்குவது குறித்து ஆராய மலேசியாவில் கூட்டம்

இலங்கை தமிழர்களுக்கு உதவி வழங்குவது தொடர்பில் மலேசியாவில் உள்ள இந்திய அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்து கொள்ளும் கூட்டமொன்று, விரைவில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

மலேசிய மனித வளத்துறை அமைச்சரும் மலேசிய இந்திய காங்கிரஸ் தலைமைச் செயலாளருமான டாக்டர் எஸ். சுப்பிரமணியம் இந்தக் கூட்டத்தை நடத்தவுள்ளார். கடந்த புதன்கிழமை நடைபெற்ற வாராந்த மலேசிய அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கையில் தமிழர் நிலைவரம் குறித்து அமைச்சர் விளக்கியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் நடத்தும் தீவிர தாக்குதல்களைத் தொடர்ந்து அங்குள்ள தமிழ் மக்கள் அனுபவிக்கும் சிரமங்களை அமைச்சரவையில் அவர் எடுத்துரைத்துள்ளார். இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கு அமைச்சரவை ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளதுடன், அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை மனிதாபிமான அடிப்படையில் தணிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கைத் தமிழர்கள் அனுபவிக்கும் இடங்கள் மீதுதான் அமைச்சரவை அக்கறை கொண்டுள்ளது எனவும் இலங்கையின் உள்விவகாரங்கள் அல்லது அரசியல் நிலைவரத்தில் தலையிடாது எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கைத் தமிழர்களுக்கான

மருத்துவ உதவிகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் போன்ற பாக்களின் தேவைகள் குறித்தே கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியர்களின் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தில் முன்வைக்கப்படும் பரிந்துரைகள், மேல் நடவடிக்கைக்காக மலேசிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

இந்த பரிந்துரைகள், ராஜதந்திர நடைமுறைகள் ஊடாக மலேசிய வெளியுறவு அமைச்சு மற்றும் மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்திடம் சமர்ப்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு மலேசிய அரசாங்கத்தின் உதவி கோரும் கடிதம் ஒன்றை ம.இ.க இளைஞர் பிரிவு ஆலோசகர் எஸ்.வேள்பாரியிடமிருந்து பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து அமைச்சர் சுப்பிரமணியம் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மலேசிய அமைச்சரவையில் விளக்கியுள்ளார்.

இதேவேளை, பாலஸ்தீனம் மீது தாக்குதல்களை நடத்தும் இஸ்ரேலுக்கு எதிராக மலேசிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் போன்று இலங்கை விவகாரம் குறித்தும் ஒரு தீர்மானத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென வேள்பாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேபோன்றதொரு கண்டனத்தை, மலேசியாவின் ஐ.நா.பிரதிநிதி வாயிலாக, ஐ.நா.விடமும் அரசாங்கம் தெரிவிக்க வேண்டுமென அமைச்சரவையில் இந்தியர்கள் பிரதிநிதி என்ற முறையில் அமைச்சர் சுப்பிரமணியத்தை கேட்டுக்கொள்வதாக வேள்பாரி தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டம் , மனித உரிமைகள் மற்றும் ஜெனிவா உடன்பாடு ஆகியவற்றை புறந்தள்ளியுள்ளதுடன் அதனை வெளிப்படையாக மீறிவருவது தொடர்பில் இலங்கை கண்டிக்கப்படவேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தநிலையில் மனிதாபிமான அடிப்படையில், இலங்கைத் தமிழர் விவகாரத்தை அணுகுவதற்கு மலேசிய அமைச்சரவை ஒப்புக்கொண்டது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக வேள்பாரி தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை அரசாங்கத்தை கண்டிக்கும் பாராளுமன்றத் தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் மலேசிய அரசாங்கத்திடம் வலியுறுத்தப்படுமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைத் தமிழர்களின் துயரங்களை எவ்வாறு தீர்ப்பதென்பது குறித்து ஆராய்வதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமெனவும் வேள்பாரி குறிப்பிட்டுள்ளார்.

இதில் முன்னின்று செயற்படதாம் விரும்புவதாகவும் இந்த நோக்கத்திற்காக மலேசிய இந்திய காங் கிரஸ் கட்சியின் இளைஞர் பிரிவு செயற்பாடுகளை ஆரம்பிக்குமெனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக சர்வதேச ஆதரவு திரட்டப்படும் இதன் மூலமே தமிழர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியும்.

அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழர் அமைப்புகளுடன் தாம் பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும் இலங்கை அரசாங்கம் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு தமது நாட்டு அரசாங்கத்தை வற்புறுத்துமாறு அந்த அமைப்புக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் வேள்பாரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கைத் தமிழர் விவகாரம் சம்பந்தமாக தமிழக முதலமைச்சர் கருணாநிதியை சந்திக்கப் போவதாகவும் வேள்பாரி குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)


## கேள்விப் பத்திரம் கோரல்

யாழ். போதனா வைத்தியசாலையில் பின்வரும் உபகரணங்கள் பராமரிப்பு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரி னால் கேள்விகள் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களையும் நிபந்தனை களையும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/– செலுத்தி 28.01.2009 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 30.01. 2009 மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் கேள்வி சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர்கள் சமுகந்தர முடியும்.

**பராமரிக்கப்படவேண்டிய உபகரணங்களின் விபரம்:**

1) Window type Air Conditioner
2) Split type Air Conditioner
3) Package type Air Conditioner
4) Mportuary coolers
5) Industrial Washing Machine
6) British Aid (Central) Air Conditioner

ஏ.தேவநேசன்,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (C/2031)


# பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால் நாமும் தயாராகவே உள்ளோம்

## இந்திய இராணுவ தளபதி

(டில்லி)

பாகிஸ்தான் தனது எல்லைப் பகுதியில் இராணுவத்தைக் குவித்து வரும் நிலையில் எந்த முடிவை எடுக்கவும் இந்தியா தயாராக உள்ளது. கடைசி வாய்ப்பாக தாக்குதல் நடத்தவும் இந்திய இராணுவம் தயாராகவுள்ளது என்று இந்திய இராணுவத் தளபதி தீபக் கபூர் தெரிவித்துள்ளார்.

இராணுவ உயர் அதிகாரிகளுடன் இராணுவத் தளபதி தீபக் கபூர் ஆலோசனை நடத்தினார். அக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா, பாகிஸ்தன் நாடுகளுக்கிடையிலான பதற்றம் அதிகரித்துள்ளது.

ஆனால், இதுகுறித்து பீதியைக் கிளப்பத் தேவையில்லை. பாகிஸ்தான் தனது பழங்குடி மாகாண எல்லையிலிருந்து படைகளை கிழக்குப் பிராந்தியத்திற்கு (இந்தியாவுடனான எல்லைப் பகுதி அனுப்பும் என எதிர்பார்க்கிறோம். தற்போது அவர்கள் கிழக்குப் பகுதி நோக்கி வர



ஆரம்பித்துள்ளனர்.

இதை இந்திய இராணுவம் ஏற்கனவே உணர்ந்துள்ளது. அவர்களின் திட்டத்தையும் நாங்கள் அறிந்து வைத்துள்ளோம்.

இருப்பினும் இப்போதைக்கு பயப்படும்படியாக எதுவும் இல்லை.

எனினும் அவர்கள் தாக்குதல் நடத்த எத்தணித்தால் நாமும் தாக்குதல் நடத்தத் தயாராகவேயுள்ளோம் என்றார். (ஓ-6)

# வவுனியா - நெடுங்கேணி பஸ் சேவை ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா– நெடுங்கேணியிடையேயான பயணிகள் பஸ் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்பயணிகள் பஸ் சேவை முன்னர் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியாயிருந்த ஓமந்தை மற்றும் புளியங்குளம் ஊடாக நடத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# கணித பாட மதிப்பீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 6, தரம் 9, க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கணித நிலையறி மதிப்பீடு நாளை மறு தினம் திங்கட் கிழமை நடைபெறும் என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (29,6)


அம்மா பகவான் சரணம்

## நன்றி நவில்வோம் நற் பெரும் நாள்



ஏகத்துவத் தருமத்தைப் போற்றும் உயரிய நற்பணி (நன்றி நவில்தல்)

**இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்**

**காலம்: சனிக்கிழமை (17.01.2009)**

**நேரம்: பிற்பகல் 01.30-5.30 வரை**

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவிகளின் நாட்டிய நடனமும் இந்திய, இலங்கை கலைஞர்களுடன் வயலின் வாசித்து 2500 தனிக்கச்சேரி நடத்திய திரு. சங்கீத வித்தியா சாகரம் ஸாகித்திய சாகரம் லய கலாநிதி உ.ராதாகிருஸ்ணனின் வயலின் இசை நிகழ்ச்சியும், நாதஸ்வர கான விநோதன் பி.எஸ்.பாலமுருகன் குழுவினரின் மங்கள வாத்தியமும் அதனைத் தொடர்ந்து ஸ்ரீ அம்மா பகவானின் பாதுகை தரிசனமும் இடம்பெறும். அனைவரும் வருக வருக என அழைக்கின்றனர்.

*ஏகத்துவ நிலையம்,*
*ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,*
*யாழ். தலைமைத்துவ பீடம்,*
*மணியர்பதி லேன், கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

*தொ.பே 021 2222935*

(சி.2027)


# சூரியனை நெருங்கும் வெள்ளி

சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த வெள்ளிக் கிரகம் (வீனஸ்), சூரியன்ன மிகவும் நெருங்கி வந்துள்ளது.

இதனால், இரவில் வெள்ளிக் கிரகத்தை தெளிவாகக் காண முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பொங்கல் அன்று வெள்ளிக்கிரகம் நீண்டநேரம் வானில் ஒளிர்ந்ததாகவும், அடுத்த சில வாரங்களுக்கு அதனைத் தொடர்ந்து காணமுடியும் என்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

மார்ச் மாதத்தில் சூரியனுக்கும், பூமிக்கும் நடுவில் வெள்ளி இடம்பெயர்ந்து விடும் என்பதால் அதன் பின்னர் அதனைக் காண முடியாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரியன் மறைவுக்குப் பின்னர் சுமார் 3மணி நேரத்துக்கு வெறும் கண்களால் வெள்ளிக் கிரகத்தைக் காணமுடியும் என்று 'ஸ்பேஸ்' அறிவியல் அமைப்புத் தலைவர் சந்தன் பூஷன் தேவ்கன் தெரிவித்துள்ளார்.

ரோம இதிகாசங்களில் 'வீனஸ்' என்பது காதல் தேவதை . அந்தத் தேவதையின் பெயரால் அழைக்கப்படும் வெள்ளிக் கிரகம், அளவில் பூமியைப் போன்றது. ஆனால் அங்கு தண்ணீர் இல்லை. முழுக்க, முழுக்க காபனீரொட்சைட்டால் நிறைந்துள்ளது. இதனால், அந்தக் கிரகத்தில் சராசரியாக 900 வெப்பம் நிலவுகிறது. (ஓ-6)

# துடுப்பாட்டத்திலும் முரளி 'தூஷ்ரா ரன்'; சரிவிலிருந்து மீண்டு இலங்கை சம்பியன்

## பங்களாதேஷ் அணி கௌரவமான தோல்வி

(மிர்பூர்)

முரளிதரனின் அதிரடியின் மூலம் இலங்கை அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை போராடி வீழ்த்தி முத்தரப்பு தொடரை கைப்பற்றியது.

பங்களாதேஷ், இலங்கை மற்றும் சிம்பாவே அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் பங்களாதேஷில் நடந்தது.

இதில் முதல் சுற்று ஆட்டத்தில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இலங்கை-பங்களாதேஷ் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதனடிப்படையில் இரு அணிகளும் மோதிய இறுதிப்போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 152 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரகீபுல் ஹசன் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் மஹமுடுல்லா 26, இஸ்லாம் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் குலசேகர, மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் துஷார, மகரூப் ஆகியோர் தலா ஒரு விக்கெட் டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 153 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

முதலாவது பந்திலேயே அதிரடிநாயகன் சனத் ஜெயசூரியா ஓட்டமெதனையும் எடுக்காமல் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து தரங்க 2, அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா ஓட்டமெதனையும் எடுக்காமலும் கபுகெதர 1, துஷார 1 என அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்து திணறியது.

எனினும் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த குமார் சங்கக்கார-முபாரக் ஜோடி பொறுப்பாகத் துடுப்பெடுத்தாடி இலங்கை அணியை சரிவிலிருந்து மீட்டு எடுத்தனர்.



முரளிதரன்

இந்த ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 20.5 ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் இலங்கை அணி 22.2 ஓவர்களில் 51 ஓட்டங்களை எடுத்த போது முபாரக் 16 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 7ஆவது விக்கெட்டுக்காக சங்கக்காரவுடன் இணைந்த மகரூப் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இதில் ஆரம்பம் முதலே நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய சங்கக்கார 118ஆவது பந்தில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்ய இலங்கை அணி 100 ஓட்டங்களை கடந்தது.

எனினும் சங்கக்கார 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 43.3 ஓவர்களில் 114 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 8 விக்கெட்டுக்களை இழந்தது.

- அடுத்து களமிறங்கிய குலசேகர வந்த வேகத்திலேயே இரண்டாவது பந்தில் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

இதன் மூலம் இலங்கை அணி இரண்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் வெற்றிக்கு 39 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமென்ற இக்கட்டான நிலையில் முரளிதரன் களமிறங்கினார்.

மறுமுனையில் மகரூப் நிதானமாகத் துடுப்பெடுத்தாட முரளிதரன் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களின் பந்துகளை நாலா புறமும் விரட்டி ஓட்டங்களைக் குவித்தார்.

முரளிதரன் 16 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 33 ஓட்டங்களைக் குவிக்க இலங்கை அணி 48.1 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 153 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்று முத்தரப்பு தொடரில் சம்பியனானது.

இதில் மகரூப் ஆட்டமிழக்காமல் 76 பந்துகளில் 38 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் நஷ்முல் ஹுசைன் 3 விக்கெட்டுக்களையும் சகிப் அல் ஹசன் 2 விக்கெட்டுக்களையும் மோர்டாஷா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த குமார் சங்கக்கார தெரிவானதுடன் வங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் தொடர் நாயகன் விருதைப் பெற்றார்.

(5)

## இலங்கை-பாக். தொடரின் கால அட்டவணையில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான கால அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி புதிய அட்டவணைப்படி 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்த இரண்டு போட்டிகளும் கராச்சியில் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து லாகூர் செல்லும் இலங்கை அணி அங்கு 24ஆம் திகதி பாகிஸ்தானுடன் கடைசி ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது.

இலங்கை அணி, இந்தியாவுடன் ஒருநாள் தொடரில் விளையாட ஒப்பந்தமானதை அடுத்தே இந்த திடீர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(5)

## ஆஸி. அணிக்கு மீண்டும் அடி தென்னாபிரிக்கா அசத்தல் வெற்றி

(மெல்போர்ன்)

மோர்கலின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 2:1 என்ற கணக்கிலும் இருபது-20 தொடரை அவுஸ்திரேலிய அணி 2:0 என்ற கணக்கிலும் கைப்பற்றின.

இந்நிலையில் இரு அணிகளுக்கு மிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று மெல்பேர்னில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மார்ஷ், டேவிட் ஹசியின் சிறப்பான அரைச்சதங்கள் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 271 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்ஷ் 79 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 52 ஓட்டங்களையும் அணித்தலைவர் பொன்டிங் 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜெரோம் மோர்கல், மைக்கெல் மோர்கல் மற்றும் போத்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 272 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 18.3 ஓவர்களில் 90 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டுமினி-மெக்கன்சி ஜோடி 123 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து தென்னாபிரிக்க அணியை மீட்டது.

எனினும் அடுத்து வந்த பௌச்சர் ஓட்டமெதனையும் எடுக்காமலும் ஜார்ஸ்வேல்ட் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்ற தென்னாபிரிக்க அணி 43.4 ஓவர்களில் 221 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் களமிறங்கிய ஜெரோம் மோர்கல் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட தென்னாபிரிக்க அணி 49.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 272 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சிறப்பான வெற்றியைப்பெற்றது.

இதில் டுமினி 71 ஓட்டங்களையும் மக்கென்சி 63 ஓட்டங்களையும் கலிஸ் 41 ஓட்டங்களையும் மற்றும் ஆட்டமிழக்காமல் ஜெரோம் மோர்கல் 18 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தைட், ஹில் பென் ஹயூஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிறக்கன் மற்றும் மைக்கெல் கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை யிலுள்ளது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த ஜெரோம் மோர்கல் ஆட்டநாயனாகத் தெரிவானார்.

(5)

# அவசர நிவாரண சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாத நிலை

## செஞ்சிலுவைச் சங்கம் கவலை

(கொழும்பு)

வன்னியில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதால் அவசர நிவாரண சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடந்த 5 தினங்களாக வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணப் பொருட்களை அனுப்புவதில் ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும் இடையில் நோயாளர்களையும் சுகாதார அதிகாரிகளையும் கொண்டு செல்வதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை மிகவும் கவலையளிப்பதாகவும் ஐ.சி.ஆர்.சியின் கொழும்பு அலுவலகம் தெரிவித்தது.

இதேவேளை செஞ்சிலுவைச் சங்கத்தின் பயணப் பாதுகாப்பினை ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் எந்நேரமும் தயாராக இருப்பதா கவும் ஆயினும் விடுதலைப் புலிகள் பயணப் பாதுகாப்பு உத்தரவாதத்தினை வழங்காமையினாலேயே ஐ.சி.ஆர்.சிக்கு வழித்துணை வழங்க முடியாதிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

தற்போதைய நிவாரண சேவைகள் குறித்து செஞ்சிலுவைச் சங்கம் மேலும் தெரிவித்துள் ளதாவது,

என்றுமில்லாதவாறு அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி மக்கள் வந்தவண்ணமுள்ளனர். அவர்களுக்கு முடியுமான அனைத்து உதவிகளையும் செய்து கொடுப்ப தில் ஐ.சி.ஆர்.சி உறுதியுடன் இருக்கின்றது.

ஆயினும் கடந்த சில தினங்களாக வன்னியில் இடம்பெற்றுவரும் மோதல்கள் நிவாரணப் பொருட்கள் மக்களை சென்றடைவதைத் தடைப்படுத்தியுள்ளன என்றார். (ச-5)

# போரை நிறுத்த வலியுறுத்தி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

## பா.ம.க. ஏற்பாடு

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரை நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பா.ம.க. சார்பில் ஜனவரி 20ஆம் திகதி தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என அக்கட்சித்தலைவர் ஜி.கே.மணி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை வருமாறு, உலகில் எங்குமில்லாத அளவுக்கு மனிதஉரிமை மீறல்கள் நடந்துவரும் இலங்கையில், இந்தியா உடனே தலையிட்டு போர் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அமைதிப்பேச்சைத் தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் எதிரே ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்.

கட்சி எம்.எல்.ஏக்கள் மற்றும் உள்ளாட்சி நிர்வாகிகளும், கட்சியினரும் இதில் கலந்து கொள்வார்கள் என ஜி.கே.மணி தெரிவித்துள்ளார். (ச-5)

# வத்தளையில் நேற்று சிறிய குண்டு வெடிப்பு

(கொழும்பு)

வத்தளை அல்விஸ் டவுண் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் சிறு குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அல்விஸ் டவுனிலிருந்து ஹேந்தலை சந்திக்கு செல்லும் குறுக்கு வீதியிலேயே இந்த குண்டு வெடிப்புச் சம்வம் இடம்பெற்றபோதும் இதனால் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

குண்டுவெடிப்பை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் படையினர் சோதனை நடவடிக்கைகளை நடாத்தினர்.

குண்டுவெடிப்பு குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-5)

## விடுவிக்கப்பட்ட பகுதிகளி...

யாவும் மாவட்ட செயலகத்தாலும் தொடர்புடைய பிரதேச செயலகங்களாலும் வழங்கப்பட்டு வருவதுடன் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இடைத்தங்கல் முகாம் மற்றும் யாழ்ப்பாணம் திருநகர் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் யாவும் திருப்திகரமாக வழங்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மக்களை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மிருசுவில் றோ.க.த.க பாடசாலை மற்றும் அதனுடன் இணைந்த தேவாலய இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான அடிப்படை தேவைகள் அடையாளம் காணப்பட்டு அவை மாவட்ட செயலகம், சாவகச்சேரி பிரதேச செயலகம், அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் திருப்தியான வகையில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மிருசுவிலில் இடம்பெயர்ந்த மக்களை தங்கவைக்கப்பட்டிருக்கும் இடைத்தங்கல் முகாமில் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் மேற்படி பணிகள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மேலதிகமாக இடம்பெயர்ந்துவரும் மக்களை தங்கவைப்பதற்கு ஏதுவாக யாழ்/கொடிகாமம் அரசினர் வித்தியாலய கட்டிடத் தொகுதியில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

மேற்படி மக்களது பராமரிப்புத் தொடர்பாக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## பாதிக்கப்பட்ட...

40 மில்லியன் பெறுமதியான இரண்டாவது தொகுதி மனிதாபிமானப் பொருட்களை அனுப்பிவைக்க தீர்மானித்திருப்பதாகவும் அறிவித்துள்ளது.

இதன் ஒரு அங்கமாக கொழும்பிற்கு தற்பொழுது விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட ஆலோசகர் பசில்ராஜபக்ஷவிடம் ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் அடங்கிய பொதியை கையளித்திருப்பதாக இலங்கைக்கான இந்தியத்தூதரகமே தெரிவித்திருக்கின்றது. (ச-5)

## வன்னிக்கு...

மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாவண்ணம் அரசாங்கம் உணவுப் பொருட்களை அனுப்பி வருவதாக பாதுகாப்பு அமைச்சு கூறியது. (ச-5)

## இன்னுமோர்...

அமைச்சு தெரிவித்துள்ளது.

குறுந்தூர ஓட்டத்துடன் வானேறுவதற்கு ஏதுவான வகையிலும அவசர தரையிறக்கத்திற்கு சுலபமான வகையிலும் இந்த விமான ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ச-5)

## எறிகணைத் தாக்குதல்...

படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் விபரம் கிடைக்கப் பெறவில்லை. இத்தாக்குதல்களினால் கல்லாறு, தருமபுரம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் பொதுமக்களை இலக்கு வைத்து படையினர் எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

விசுவமடு நகர் பகுதியிலும் நேற்று முன்தினம் படையினரின் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த பொது மக்கள் மீது நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதல்களில் 2 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் ஜோன்மேரி சம்மாட்டி (வயது 58), மற்றும் சண்முகம் செல்வராஜா ஆகிய இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான சியாந்தன் (வயது 10), சுதர்சன் (வயது 12), சுலக்ஷன் (வயது 15) ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான ஜோஜ் சுஜீவன் (வயது 17), ஜோஜ் சுகந்தன் (வயது 29) மற்றும் ஜெகன் (வயது 26), இராமஜெயம் (வயது 50) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். (ச-5)

## புதுக்குடியிருப்பு...

வீழ்ந்து வெடித்ததில் ஓட்டுநர் கொல்லப்பட்டுள்ளதுடன் சிறுமி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். ஒருவர் உயிர் தப்பியுள்ளார் என நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

தொடர் எறிகணைத்தாக்குதல் காரணமாக கொல்லப்பட்டவர்களின் உடலங்கள் மீட் கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் நடத்திய எறிகணைத்தாக்குதலில் இரண்டு பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இதில் படுகாயமடைந்த சிறுவன் ஒருவன் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தேராவில் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 3 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மல்லாவி வன்னி விளாங்குளத்திலிருந்து இடம்பெயர்ந்து தேராவிலில் வசித்து வந்தவர்களான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இராமநாதன் (வயது 65), இராமநாதன் குமரன் (வயது 30) மற்றும் குமரனின் மாமியாரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவரின் பெயர் விபரம்இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

படுகொலை செய்யப்பட்ட குமரனின் மனைவி ஒன்றரை வயது குமரனின் மகள் ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பிலுள்ள கைவேலி, கோம்பாவில் பகுதிகளிலுள்ள பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று முற்பகல் 11.45 மணியளவில் எறிகணைத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். யோகேஸ்வரன் பிரசாத் (வயது 8), பாபுகரன் ஜெயந்தினி (வயது 33), ஞானரூபன் வசந்தகுமார் (வயது 30), நந்தகுமார் தவோதினி (வயது 30) உள்ளிட்ட 7 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் 3 பேரின் பெயர் விபரம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. காயமடைந்த அனைவரும் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## தரும...

விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இதில் 51படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன்150 படையினர் காயமடைந்துள்ளனர்.

## இந்.வெளியுறவுச் செயல...

இலங்கையில் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு அங்கு அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று தமிழகக் கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்நிலையில் இலங்கை அரசாங்கத் தரப்பினருடன் பேச்சு நடத்துவதற்காக இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வந்துள்ளார்.

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளை அவர் சந்தித்து வருகிறார்.

வெளிநாட்டமைச்சர் றோகித போகொல்லாகமவை அவரது அமைச்சில் சந்தித்த சிவ்சங்கர் மேனன், இரு தரப்பு உறவுகள் குறித்தும் இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலை குறித்தும் கலந்துரையாடியிருக்கிறார்.

இது குறித்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை வெளிநாட்டமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், இரு நாடுகளுக்கிடையேயான இரு தரப்பு நட்புறவு வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு உச்சக் கட்டத்தில் இருப்பதாக மேனன் இந்த சந்திப்பின் போது தெரிவித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை-இந்திய ஒப்பந்தம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை தேடுவதற்கு திறவுகோலாக இருப்பதாகவும் புலிகளுக்கு எதிராக அரசு பெற்றுவரும் தொடர் வெற்றிகள் இதன் அடிப்படையில் சகலராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றினை காண்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியிருப்பதாகவும் வெளிநாட்டமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்திருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேனன் இன்று சனிக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாட இருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வன்னிப் பகுதி மீது அரசு மேற்கொண்டுவரும் இனப்படுகொலை யுத்தம் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் உடனடி போர் நிறுத்தம் அவசியம் என இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளதாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வன்னிப் பிரதேசத்தில் கௌரவமாக தங்களுடைய தேவைகளை தாங்களே பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் இன்று தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் அநாதைகளாக கையேந்தி நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் என அரசு கூறிவருகின்ற போதிலும் இதனால் அதிகம் பாதிப்புக்குள்ளாகியிருப்பது சாதாரண அப்பாவிப் பொதுமக்களே. எனவே இந்த யுத்தம் தொடரக் கூடாது. அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலை நிறுத்தப்பட வேண்டுமானால் யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென சிவ்சங்கர் மேனனிடம் வலியுறுத்தியுள்ளதாக குறிப்பிட்ட சம்பந்தன், இவ் விடயத்தை அவர் தனது கவனத்தில் எடுப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்தார்.

சிவ்சங்கர் மேனனுடனான சந்திப்பின் போது தமக்கு எதுவித உறுதிமொழியும் தரப்படவில்லை எனக் கூறிய சம்பந்தன் இந்தியா தமிழர் பிரச்சினையில் ஆக்கபூர்வமான பங்களிப்பினை செய்ய விரும்புகிறது எனவும் அது தொடர்பாக சிந்தித்து வருகிறது என்ற விடயமும் மேனனுடனான சந்திப்பின் போது தமக்குப் புலப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசுக்கும் தமக்குமிடையிலான சந்திப்புக்கள் தொடர்ந்து இடம்பெறும்எனக் கூறிய இரா.சம்பந்தன் இந்தியா மனித நேய உதவிகளை அளித்து வருவது அவர்களுடைய பங்களிப்பில் ஒரு அங்கம் மட்டுமே என்றும் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த யுத்த நிறுத்தத்தை வலியுறுத்துவதே அவசியமானது என்றும் பிரணாப் முகர்ஜியின் வருகை குறித்து இச்சந்திப்பின்போது பேசப்படவில்லை எனவும் கூறினார். (ச-14)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Aat (Sri lanka)

Foundation, Intermediate, Final

*Medium:-* தமிழ் & English

விரிவுரைகள் சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன. இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் உடன் பதிவை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதுவே JUNE 2009 பரீட்சைக்கான இறுதிச் சந்தர்ப்பம்.

External Degree

GAQ, BA 1, BA (Final)
1st in com, B com (1,11 & Final)

Furthur Detail
Director

Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
(C-2030)

Microsoft Certified
Systems Engineer MCP - MCSE
★ 100% செய்முறைகளுடன் கூடிய நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ கணனித்துறையில் வேலை செய்வோருக்கு சர்வதேசதகுதி
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ ComTIA A+ (Hardware Technician-AUSTRALIA) கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 19.01.2009 07.00AM/12.00PM
Become an Engineer
விபரங்கள் நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.